விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 26 திங்கட்கிழமை (12.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

## முகமாலைப் பகுதியில் நேற்று அமைதி நிலவியது

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுப் போர் முனைகளில் நேற்று அமைதி நிலவியதாக இராணுவத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரியான பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். அதே நேரம் வவுனியா, மன்னார் இராணுவ முன்னரங்க பகுதிகளில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் 34 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு


(கொழும்பு)

ஐ.தே.க.கட்சியின் மூத்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு-செலவு திட்ட விவாதத்தின் போது அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக தோட்டத் தொழிலாளர் அமைச்சர் டி.எம்.ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

கொழும்பு நாளிதழ் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்கள் ஐ.தே.க.பேச்சாளர் லக்ஷ்மன் கிரியெல்ல அண்மையில் வெளியிட்ட கருத்தை மறுத்து (08 ஆம் பக்கம் பார்க்க)

பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டு வரும்

# இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும்



இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## இந்தியா வலியுறுத்தல்

(கொழும்பு)

பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலிகொண்டு வரும் இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் அல்லாது சமாதானப் பேச்சுக்களினூடான அரசியல் தீர்வொன்றை காண வேண்டுமென இலங்கைக்கு குறுகிய விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கொழும்பில் தெரிவித்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரிசியின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு உட்பட சகல பகுதிகளிலும் அரிசியின் விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ அரிசி ஐந்து ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 50

## பாண் மற்றும் மாவின் விலைகள் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு யால கப்பலில் தருவிக்கப்பட்ட கோதுமை மா யாழ். மாவட்டத்தில் உள்ள 24 பல நோ.கூ. சங்கங்களுக்கும்

எனவே சகல பல நோ.கூ.சங்கங்களும் தமக்குரிய வழங்கற்கட்டளை இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று மாவினை உரிய களஞ்சியத்திலி

## சட்டநாதர் வீதியில் இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகக் கோப்பாய்

(கொழும்பு)

கொழும்பு உட்பட சகல பகுதிகளிலும் அரிசியின் விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ அரிசி ஐந்து ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 50 ரூபா முதல் 60 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டு வந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

# விலைகள் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு யா்ல கப்பலில் தருவிக்கப்பட்ட கோதுமை மா யாழ். மாவட்டத்திலுள்ள 24 பல நோ.கூ. சங்கங்களுக்கும் பேக்கரி சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே சகல பல நோ.கூ.சங்கங்களும் தமக்குரிய வழங்கற்கட்டளை இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று மாவினை உரிய களஞ்சியத்திலிருந்து பெற்று பொதுமக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் (08 ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகக் கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தில் நல்லூர் குறுக்குத் (08 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கான உதவிகளை நிறுத்த உதவி வழங்கும் நாடுகள் தீர்மானம்?

(கொழும்பு)

இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளை நிறுத்தி வைப்பதற்கு கனடா, நெதர்லாந்து, ஜேர்மனி போன்ற நாடுகள் முடிவு செய்துள்ளதாக உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த மூன்று நாடுகளும் இலங்கைக்கான உதவிகளை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து நிறுத்துவதற்கு முடிபெடுத்துள்ளன. இலங்கைக்கான அபிவிருத்திப் பணிகள் முன்னேற்றம் காணப்படாது விட்டாலும் அதற்கென ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அபிவிருத்தி உதவிகளை மாற்றப் போவதில்லை என உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

இந்த நாடுகளின் முடிபுக்கு அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட போருக்கான வரவு-செலவுத் திட்டமும் ஒரு காரணம் என அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இருந்த போதும் (08 ஆம் பக்கம் பார்க்க)

# வரணிப் பகுதியில் ஒருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வரணி இயற்றாலைப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொள்ள முயற்சித்த ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம் (08 ஆம் பக்கம் பார்க்க)

# டீசல் பற்றாக்குறையால் மின்சாரம் தடைப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் வழங்குவதற்கு போதியளவு டீசல் கையிருப்பில் இல்லாமையினால் நேற்று முன்தினம் மின்சாரம் தடைப்பட்டது. எனினும் அரச அதிபர் க.கணேஷின் துரித நடவடிக்கையினால் டீசல் உடனடியாகப் பெறப்பட்டு மின்சாரம் சீராக வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் முதல் நேற்று நண்பகல் வரை டீசல் பற்றாக்குறையினால் மின்சாரம் குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்டது. சில இடங்களில் மின்சாரம் முற்றாகவே தடைப்பட்டிருந்தது.

இந்நிலையில் அரச அதிபர் க.கணேஷ் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக நேற்றுக் காலை 11.30 மணிமுதல் சீரான மின்சாரம் வழங்கப்பட்டது.

இதேவேளை (08 ஆம் பக்கம் பார்க்க)

# யாலவுக்கு இராணுவத் தளபதி விஜயம்

(கொழும்பு)

யால பகுதியின் பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்வதற்காக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று அப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளார்.

இவ்விஜயத்தின் போது யால பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகளை இராணுவத் தளபதி சந்தித்துக் கலந்துரையாடினார் .

பிரிகேடியர் (08 ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முகமாலைத் தாக்குதல் நடவடிக்கை குறித்து

**தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்ட படையினரின் முகமாலை முன்னகர்வு நடவடிக்கைக்கு யார் பொறுப்பேற்பது என்பது தொடர்பில் அரசாங்கத்திற்கும் படையினருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.இது குறித்து கொழும்பிலிருந்து வெளியாகும் 'த நேசன்' வார ஏட்டில் இடம்பெற்றுள்ள செய்தி விபரம் வருமாறு,**

தென்னந்தோப்புக்கள்,நெல் வயல்கள், பச்சை மரங்கள், மண்திட்டுக்கள் என இரண்டு கி.மீ. அகலமானதும், 25 கி.மி. நீளமானதுமான நீரேரியை இங்கு குறிப்பிடவில்லை. யாழ்.குடாநாட்டின் கழுத்துப் பகுதியிலுள்ள 12 கி.மி. அகலமான பகுதியே இதுவாகும்.

இந்தப் பகுதிக்குக் கிழக்கிலுள்ள பகுதி நீளமான கடலாகும். மேற்குப் பகுதி கடல் நீரேரியாகும். விடுதலைப்புலிகளுக்கும்



படையினருக்குமிடையிலான முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் மேற்கில் கிளாலியிலிருந்து, நடுவே முகமாலையை உள்ளடக்கியதாக, கிழக்கில் நாகர்கோவில் வரை நீண்டுள்ளது.இந்த நிலைகள் குடாநாட்டின் கழுத்துப் பகுதி வரை மட்டுமல்லாது கடல் மற்றும் நீரேரி வரையும் சிறிது தூரம் நீண்டுள்ளது. இது எதிர்த் தரப்பின் ஈரூடகத் தாக்குதலைத் தடுக்கும் உத்தியாகும்.

இப் பகுதி படை நடவடிக்கைக்கு ஏற்ற பகுதியல்ல. பெரும் படையினர் மோதல்களில் ஈடுபடுவதற்கும் இங்கு சாத்தியங்கள் இல்லை. இது தவிர பருவ மழை காலத்தின் போது இந்தப் பகுதி சேறும் சகதியுமாக மாற்றமடைவதனால் அங்கு பிரதான போர் டாங்கிகளையும் துருப்புக் காவி வாகனங்களையும் பயன்படுத்துவது கடினமானது.

தரைத் தாக்குதல் எம்.ஐ.-24 உலங்கு வானூர்திகள் தாக்குதலில் ஈடுபடுவதற்கும் தற்போது காலநிலை சாதகமற்றது. இந்த நிலையிலும் கடந்த புதன்கிழமை படையினரால் பெரும் எடுப்பிலான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு தாக்குதலின் போது 175 படையினர் கொல்லப்பட்டதுடன் 400 பேர் படுகாயமடைந்தனர். கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி விடுதலைப்புலிகளும் முகமாலையில் வலிந்த தாக்குதலை நடத்தியிருந்தனர். கடந்த ஆண்டு நடைபெற்ற இந்த இரு சமர்களும் இந்தப் பகுதி தற்காப்புச் சமருக்கே உகந்தது என்பதை உணர்த்தியிருக்கும்.

படையினருக்கு அனுகூலமான கவசப் படையும் வான் படையினரும் கூட இந்தக் களத்தில் பயன்படவில்லை. விடுதலைப்புலிகளின் துல்லியமான பீரங்கித் தாக்குதலானது படையினருக்குக் கவலையளிப்பதாகவேயுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் சந்திரசிறி மீதும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. எனினும் அது வெற்றி பெறவில்லை.ஆனால் இந்த வருடம் தொடக்கத்தில் கவசத் தாக்குதல் படை பிரிகேட்டின் கட்டளை அதிகாரியான லெப்.கேணல் ரால்ஃப் நுகெரா மீது வெற்றிகரமான பீரங்கித் தாக்குதலைப் புலிகள் மேற்கொண்டிருந்தனர். எல்லாவற்றையும் விட இந்தக் களமுனையானது திறந்த பகுதியாகும்.

விடுதலைப்புலிகளின் பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதலுக்குப் படையினர் இலகுவில் இலக்காகி விடலாம். இந்த நிலையிலும் படையினர் ஏன் கடந்த புதன்கிழமை நடவடிக்கையை மேற்கொண்டனர். கால நிலையும் பாதகமாகவேயிருந்தது.

இந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை குறித்து வேறுபட்ட இடங்களிலிருந்து பல தரப்பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் நாம் இதற்கு முன் மற்றொரு காரணத்தைப் பார்க்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு எதிராகவே தாம் தாக்குதல் நடத்துவதாக படைத் தரப்புத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றது. கடந்த புதன்கிழமையும் படையினரின் பிரசார மையம் அதனையே தெரிவித்திருந்தது. ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ படையினரே நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவித்திருந்தார்.ஏனெனில் அவரால் அதனை மறைக்க முடியவில்லை.

முன்னர் கைது செய்யப்பட்ட படையினர், ஆயுதங்கள் தொடர்பான புகைப்படங்களை விடுதலைப்புலிகள் வெளியிடுவதுண்டு. இது படையினர் தொடர்பான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி விடும். இம் முறையும் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் புகைப்படங்களை அவர்கள் வெளியிட்டிருந்தனர். போர் நிறுத்த ஒப்பந்தமும் எல்லைகளை மதிப்பதும் காகிதத்தில் மட்டும் உள்ளதைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவார். எனவே அதனை மீறுவது குறித்து அவர் கவலைப்படவில்லை.

**அரசியல் இலாபங்களுக்கான படை நடவடிக்கைகள்**

முழு நடவடிக்கையும் அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவை. வரவு செலவுத் திட்டத்தை அறிவிக்கும் போது புதிய முன்னரங்க நிலையையும் அறிவிக்கும் பொருட்டே பெரியளவிலான படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய படை

# அரசு-படையினர் இடையே கருத்து வேறுபாடு

நடவடிக்கையின் போதும் தற்போதைய அரசு, அரசியல் இலாபங்களை அடைய முற்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட சம்பூர் மீதான படை நடவடிக்கையை சுதந்திரக் கட்சியின் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்து பெரும் அரசியல் இலாபங்களைப் பெறும் வண்ணம் அரசு சில நாள்கள் தாமதப்படுத்தியிருந்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை முடிபுக்குக் கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்ட நாளில் சந்திரிகா அரசு 'முன்னோக்கிப் பாய்தல்' படை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. எனினும் அதில் மேற்கொள்ளப்பட்டதை விட விரைவாகக் தளம் திரும்பியிருந்தது.

கடந்த ஆண்டு முகமாலையில் பெறப்பட்ட அனுபவத்திலிருந்து இம் முறை இராணுவம் தனது இழப்புக்களை இயலுமானவரை குறைவாக்கியுள்ளது. கிளாலி,முகமாலை, நாகர் கோவில் கள முனைகள் தற்காப்புச் சமருக்கே ஏற்றவை. வான் படையினர் தாம் தாக்கியழித்துள்ளதாகக் கூறியபோதும் விடுதலைப்புலிகள் பூநகரியிலுள்ள பீரங்கி நிலைகளையும் பளையிலுள்ள மோட்டார் நிலைகளையும் பேணி வருகின்றனர்.எனவே படையினர் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளையே இந்தப் பகுதியில் மேற்கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகள் தமது தற்கொலைப் படையினரையும் மட்டுத்தப்படுத்தப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டு உயரக இலக்குகளை அழிப்பதையே முதன்மைப்படுத்தி வருகின்றனர். அவர்கள் பெரும் தாக்குதல் சமரைத் தவிர்த்தே வருகின்றனர். ஆனால் நவம்பர் மாத இறுதிப் பகுதியில் விடுதலைப் புலிகள் இந்த அச்சில் தாக்குதலை நடத்தி யாழ்.குடாநாட்டை நோக்கி முன் நகரலாம் என படைத் தரப்பின் ஒரு பிரிவினர் நம்புகின்றனர்.

படையினரின் வன்னி மீதான நடவடிக்கையைத் தடுப்பதில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டு வருகின்றனர். வான்படையினர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீது தாக்குதலை நடத்திய பின்னர் நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதல் மிக முக்கியம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.கடற்படையினர் விடுதலைப்புலிகளின் 4 கப்பல்களையும் அண்மையில் அழித்திருந்தனர். கிழக்கில் படையினர் குறிப்பிடத்தக்களவு வெற்றியைப் பெற்றிருந்தனர். ஆனால் வன்னியில் மெதுவாக நகர்வதை விடுத்து திடீரென இரத்தம் சிந்தியுள்ளனர்.

**படையினர்-அரசு கருத்து வேறுபாடு?**

வட பகுதியில் சரியான நேரம் வரும்வரை மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளே தேவையானது. போரானது இயலுமானவரை படை ஜெனரல்களின் பொறுப்பில் விடுபட வேண்டும்.

ஆனால் அரசியல் இலாபங்களுக்கான சமர்களை தெரிவு செய்வது மிகவும் ஆபத்தானவை. கடந்த வருடம் படையினர் வலிந்த தாக்குதல்களை நடத்தப் போவதில்லையென அனைத்துலக சமூகத்தை நம்ப வைக்க மகிந்த முற்பட்ட போது முகமாலைச் சமர் நிகழ்ந்தது.

படைத் துறையானது அரசின் ஒரு பகுதியாகும்.எனவே அரசின் பொதுவான கொள்கைகளுக்கு அமைய பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், படை அதிகாரிகள் நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.போரிலும் சமாதானத்திலும் அரசு மாறினாலும் அதன் கொள்கைகளில் மாற்றம் ஏற்படக்கூடாது. போரில் எல்லாச் சமர்களும் வெல்லப்படுவதில்லை. வியட்நாம் போரில் அமெரிக்கா பெரும்பாலான சமர்களில் வெற்றியீட்டிருந்தது. ஆனால் போரையிழந்து விட்டது. சில நேரங்களில் நீங்கள் எடுக்கும் முடிபுக்கான விலைகளை நீங்களே செலுத்த வேண்டியிருக்கும்.

வரவு–செலவுத் திட்டம் தொடர்பான 2–வது அறிக்கைக்குப் பின்னரான வாக்கெடுப்பானது மகிந்த அரசின் தலைக்கு மேல் வாள் தொங்கிக் கொண்டிருப்பதைப் போன்றது. அதாவது வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் நாடாளுமன்றம் தானாகவே கலைக்கப்பட்டதாகவே அர்த்தம்.

அரசு தப்புவதைத் தீர்மானிக்கும் முக்கிய அரசியல் கட்சியாக ஜே.வி.பியுள்ளது. அது விடுதலைப்புலிகளை முறியடிப்பை ஆதரிப்பதுடன்,படையினரின் நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஆதரவையளித்து வருகின்றது. நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது முகமாலையில் மேற்கொள்ளப்பட்டது அரசியல் மயப்படுத்தப்பட்ட படை நடவடிக்கையா? படையினருக்கு 165 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்ட போதும் முகமாலையில் ஏற்பட்ட தோல்வி எல்லோருடைய கண்களையும் திறந்திருக்கும்.

தமிழ்ச்செல்வனை நினைத்து விடுதலைப் புலிகள் வருத்தத்தில் இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பிலா பெரும் எடுப்பிலான நடவடிக்கை படையினரால் மேற்கொள்ளப்பட்டது? இறக்கும்போது தமிழ்ச்செல்வன் பூநகரி கட்டளைத் தளபதியாக பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர்கள் வருத்தத்தில் இருந்தார்களோ இல்லையோ எதிர்த் தாக்குதலானது கேணல் தீபனால் திறைமையாகத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



இது அநுராதபுரம் வான் படைத் தளம் மீதான தாக்குதலில் இருந்து வேறுபட்டது. அங்கு விடுதலைப் புலிகள் தாக்கும்போது படையினர் சுப்பர் குறஸ், சுப்பர்ஸ்ரார் களியாட்டத்தில் மூழ்கியிருந்தனர். எதிரிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது தாக்குதலை நடத்தும் போது வேறு சில காரணிகளையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

அந்தப் பகுதிகளில் பொறிவெடிகள் இருக்கலாம். மிதிவெடிகள், கிளைமோர் குண்டுகளை வெடிக்க செய்யலாம்.பொறிவெடிகள், போலியான காவலரண்கள், குழிகள் என்பன ஒரு உயர்ரக கெரில்லா அமைப்புக்கு எதிராக சமரில் மரபு வழியிலான படையினர் சந்திக்கும் நெருக்கடிகள். ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்குப் பின்னர் படையினர் அதன் கடுமையை உணர்ந்திருந்தனர்.

பெருமளவான படையினர் விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் நகர்வது பேரழிவை ஏற்படுத்தலாம்,விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிய குழுக்களாக படையினரை வன்னியில் ஈடுபடுத்தி வருகின்றபோதும் அது குடாநாட்டின் தென்பகுதியில் சாத்தியமற்றது.பருவ மழையின் போதும், விடுதலைப் புலிகளின் பீரங்கி மற்றும் மோட்டார் நிலைகள் பூநகரி, பளை பகுதியில் உள்ள வரையிலும் இந்தப் பகுதி மீதான படை நடவடிக்கை சாத்தியமற்றது.

முகமாலை பகுதி மீதான படை நடவடிக்கை கைவிடப்பட்ட பின்னர் கடந்த வியாழக் கிழமை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா யாழ்.குடாநாட்டிற்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் அங்கு யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர சிறியை சந்தித்தார்.

அரசியல் காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையை அவர் கை கழுவி விட்டதாக சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.கடந்த ஆண்டு முகமாலையில் நடை பெற்ற சமருக்கான பொறுப்பை சரத் பொன்சேகா பாதுகாப்புச் சபை கூட்டத்தில் ஏற்றிருந்தார். ஆனால் இந்தத் தடவை யார் அதற்கான பொறுப்பை ஏற்கப் போகின்றனர்?

**முகமாலைப் படைநடவடிக்கை விபரம்**

இந்த படை நடவடிக்கையின் நோக்கம் முகமாலையிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி அரண்களை கைப்பற்றுவதே. இந்த நடவடிக்கையில் படையினரின் பின்னிருப்பு தாக்குதல் பிரிவான 53 ஆவது படையணியும் அந்தப்பகுதியின் பாதுகாப்புக்கு பொறுப்பான 55 ஆவது படையணியும் பங்குபற்றியிருந்தது.

53 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியான பிரிகேடியர் சமந்த சூரிய பண்டார மற்றும் 55 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியானபிரிகேடியர்கமல் குணரட்ன ஆகியோருடன் இந்த நடவடிக்கை தொடர்பாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சந்திரசிறி தொடர்புகளை மேற்கொண்டிருந்தார். இதற்காக 300க்கும் மேற்பட்ட படையினர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.53 ஆவது படையணியின் வான் நகர்வு பிரிகேட்டைச் சேர்ந்த 5 ஆவது கெமுனு வோச்,1ஆவது விஜயபாகு இலகு காலாட் படை ரெஜிமெண்ட ஆகிய படைப்பிரிவினர் இந்த தாககுதலில் ஈடுபட்டிருந்தனர்.

53 ஆவது படையணி வான் நகர்வு பிரிகேட், 3ஆவது பிரிகேட், கவசத் தாக்குதல் பிரிகேட் ஆகிய பிரிகேட்டுக்களைக் கொண்டது. எனினும் கவசத் தாக்குதல் பிரிகேட் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவில்லை.

முகமாலை முன்னணி அரங்குகளில் 55 ஆவது படையணியைச் சேர்ந்த4ஆவது இலகு காலாட் படை பிரிவு, ஏழா வது விஜய பா றெஜிமெண்ட்,நாலாவது கெமு னுவோச், 1ஆவது இலகு காலாட்படை ஆகியன ஈடுபட்டு வருகின்றன. வான் நகர்வு படையணியின் நடவடிக்கைக்கு உதவுமாறு இந்த படைப்பிரிவினருக்கும் உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகளை அழிக்கும் பொருட்டு படையினர் அவர்களின் முன்னணி அரங்குகளை நோக்கி நகர்ந் தனர். படையினருக்கு உதவியாக பல்குழல் உ[illegible] கணை செலுத்தி மற்றும் கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

விடுதலைப்புலிகளும் 81 மி.மீ. மற்றும் 120 மி.மீ. மோட்டார் தாக்குதல்களைப் பளையிலிருந்தும் பீரங்கித் தாக்குதலை பூநகரியிருந்தும் மேற்கொண்டிருந்தனர். இந் நடவடிக்கையில் 11 படையினர் கொல்லப்பட்டதாகவும் 50 பேர் படுகாயமடைந்திருந்ததாகவும் படைத் தரப்புத் தெரிவித்திருந்தது.

படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களின் புகைப்படங்களை விடுதலைப்புலிகள் வெளியிட்டிருந்தனர். விடுதலைப்புலிகளின் பொறி வெடிகளை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த படையினரும் காயமடைந்திருந்தனர்.

பொறி வெடிகள், குழிகள் போன்றவற்றைத் தோண்டியும் விடுதலைப்புலிகள் படையினரைப் பொறிக்குள் சிக்க வைத்தனர். வான் படையினர் எம்.ஐ. 24 ரகத் தாக்குதல் உலங்கு வானூர்தியைப் பயன்படுத்திய போதும் பாதகமான காலநிலை காரணமாக அதன் பயன்பாடும் மட்டுப்படுத்தப்பட்டதாகவேயிருந்தது. எனினும் இந்தப் படை நடவடிக்கையில் 20 படையினர் கொல்லப்பட 115 பேர் காயமடைந்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று ஒரு தகவல்

## மதுவின் கொடுமை

ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் நல்ல ராஜா தான். இருந்தாலும் அவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந் தது. அப்பப்ப கொஞ்சம் மது அருந்துவார். அவ்வளவு தான். ஆரம்பத்தில் சிறிய அளவில் மது அருந்த ஆரம்பித்த அவர் நாளுக்கு நாள் அதிகமாகக் குடிக்க ஆரம்பித் தார். இது எல்லோருக்கும் பெரும் கவலையளிப்பதாக இருந்தது. ராஜாவே குடிக்க ஆரம்பித்தால் ராஜ்யத்தின் நிலை என்ன ஆகும்.

ரா ணிக்கு இது பெரும் மனச் சங்கடமாக இருந்தது. என்ன செய்வது என்று யோசித்தார். புத்திசாலியான முதல் அமைச் சரிடம் சென்று இதைக் கூறினார். மன்னரை எப்படியாவது இந்த மதுப் பழக்கத்திலிருந்து காப்பாற்றியாக வேண்டும். அதற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும். எனக் கேட்டார். சரி... பார்க்கிறேன் என்று முதலமைச்சரும் ஒப்புக் கொண்டார்.

ஒருநாள் அந்த ராஜா இருந்த தனியறைக்குள் முத லமைச்சர் போனார். அங்கேயிருந்த ஒரு மதுப் போத்தலை எவருக்கும் தெரியாமல் எடுத்து தனது மடியிலே மறைத்து வைத்துக் கொண்டார். ராஜா இதைக் கவனித்து விட்டார். உடனே அவரைக் கூப்பிட்டார். "மடியிலே என்ன?" என்று கேட்டார். ஒன்றும் இல்லை என்றார் அமைச்சர். "உண் மையைச் சொல்! மடியிலே என்ன?" என்று மறுபடியும் ராஜா கேட்டார்.

இது... இது... வந்து கிளி! என்றார் அமைச்சர். "என்ன உளறுகிறாய்... நீ எடுத்தது கிளியா?" என்றார் ராஜா இல்லை... இல்லை... இது குதிரை என்றார் அமைச்சர் ராஜாவுக்கு கோபம் அதிகரித்தது. "இதே பார்... செய்த குற்றத்தைஒப்புக்கொள்! அது தான்உனக்குநல்லது... அதை விட்டுவிட்டு குதிரை, கழுதை என்று கதை சொல்லிக் கொண்டிருக்காதே" என்றார் ராஜா.

''அரசே! நீங்கள் சொல்வது தான் சரி! என் மடியிலே இருப் பது கழுதைதான்" என்றார் அமைச்சர். ராஜா கோபத் தின் எல்லைக்கே போய்விட்டார். "இதோ பார்! கடைசியா கக் கேட்கிறேன்... உள்ளதை சொன்னால் உயிரோடு விட்டு விடுவேன்... இல்லை உன் தலையை வெட்டும்படி உத்தரவு போடுவேன்..." என்றார் ராஜா! இந்த முறை அமைச்சர் உண் மையை ஒப்புக்கொண்டார். "மடியிலே இருப்பது மதுப் போத்தல்'' என்றார். ''இதை ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கலாமே" என்றார் ராஜா. "இப்பொழுதும் சொல் கிறேன்... நான் சொன்னது எதுவும் பொய் இல்லை" என் றார் அமைச்சர். ராஜா முறைத்துப் பார்த்தார். அமைச்சர் மெதுவாக அவரைப் பார்த்துச் சொன்னார்...

மன்னா!.. முதலிலே ஒரு கோப்பை மது உள்ளே போனால் ஒன்றும் செய்யாது. இரண்டாவது கோப்பை உள்ளே போன தும் மனிதன் கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திருப் பிச் சொல்லிக் கொண்டிருப்பான். அதனாலே ''கிளி'' என் றேன். மூன்றாவது கோப்பை உள்ளே போனால் குதிரை மாதிரி உறும ஆரம்பித்து விடுவான்... நாலாவது கோப்பை போனால் கழுதை மாதிரிக் கத்துவான்.

ஐந்தாவது கோப்பை போனால் மனிதன் மதுவாகவே ஆகி விடுவான். அதனா லேதான் ஐந்தாவது தடவை கேட்டதும் மது என்பதை ஒப்புக்கொண்டேன் என்றார் அமைச்சர். மது எவ்வளவு கெடு தல் செய்கிறது என்பதை ராஜாவுக்கு ரொம்ப சாமத்தியமாகப் புரிய வைத்துவிட்டார். அதன் பின் ராஜா மதுப்பழக்கத் தையே விட்டு விட்டாராம்!

இந்தக் காலத்திலே குடிகாரர் ஒருவர் மதுபானக் கடையிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தார். அந்தச் சம யத்திலே ஒரு பிச்சைக்காரன் அவரிடம் போய் கையேந்தி னான். "ஐயா... பசிக்கிறது..." "என்றான் அப்படியா? வா எங்கள் வீட்டுக்கு! சாப்பாடு போடுகிறேன்! அதற்கு முன் நீயும் கொஞ்சம் சாராயம் குடித்துக் கொள். நான் காசு தருகிறேன்'' என்றார் அக்குடி மகன் "ஐயையோ!... சாராயம் குடிப்பது ரொம்பக் கெட்ட பழக்கம்... வேண்டாம்..." என்றான் அவன்.

சரி... வா... என்று அவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். மனைவியைக் கூப்பிட்டு அவனுக்குச் சாப்பாடு போடச் சொன்னார்... அந்த அம்மாவும் சாப்பாடு போட் டார். பிச்சைக்காரன். சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அப் பொழுது அந்தக் குடிமகள் தன் மனைவியைப்பார்த்து "இதோ பார்... இந்த ஆள் குடிப்பது தப்பு என்று சொல்கிறான். ஆனால் அவன் பிச்சையெடுத்துக்கொண்டிருக்கிறான். நான் குடிக்கிறேன்... ஆனால் நன்றாகவே இருக்கிறேன். குடிக்கிறேன் என்று என்னை நீ அடிக்கடி திட்டிக்கொண்டிருக்கிறாய்..." என்றான் கம்பீரமாக.

அந்த அம்மா ஒன்றும் சொல்லவில்லை அதற்குள் அந் தப் பிச்சைக்காரன் சாப்பிட்டு முடித்து கைகழுவிக் கொண்டு வந்தான். வந்தவன் அந்தக் குடிமகனைப் பார்த்து-''ஐயா! நான் ஒன்று சொன்னால் நீங்கள் கோபித் துக் கொள்ளக்கூடாது...'' நான் முன்னர் உங்களைப்போல் குடித்துக்கொண்டுதான் இருந்தேன். அதனாலே தான் பிச்சைக்காரன் ஆனேன்... என்று சொல்லிவிட்டு தெருவிலே இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் தெரிவிப்பதை கண்டிக்கும் ஜெயலலிதா மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்

## தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சிப் பொதுச் செயலாளர்

அதிமுக பொதுச் செயலர் ஜெயலலிதா தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என தமிழ்தேசப் பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலர் பெ.மணியரசன் தெரிவித்துள்ளார். இது குறித்து தஞ்சாவூரில் அவர் விடுத்த செய்திக் குறிப்பு,

இலங்கை விமானப் படையினர் அண்மையில் நடத்திய குண்டுவீச்சில், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட 6 பேர் கொல்லப்பட்டதற்கு உலகெங்கிலுமிருந்து பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர்.

தமிழ்ச்செல்வன் மறைவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி இரங்கல் கவிதை எழுதி வெளியிட்டார். இதை அதிமுக பொதுச் செயலர் ஜெயலலிதா கண்டித்து, முதல்வர் பதவியிலிருந்து கருணாநிதி விலக வேண்டும் என்று கோரியுள்ளார். மேலும் அமைச்சரவையை நீக்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் இச்செயல் மனித நேயமற்றது. இது தமிழ் இனத்தின் மீது பகையைக்கக்கும் போக்கு. இலங்கைத் தமிழர்களை ஆதரிக்கிறேன். விடுதலைப் புலிகளை எதிர்க்கிறேன் என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

தமிழ்ச்செல்வன் உடல் அடக்க நிகழ்வில் 6 கி.மீ.தொலைவுக்கு தமிழர்கள் தான் நின்று அஞ்சலி செலுத்தினர். இலங்கைத் தமிழர் வேறு விடுதலைப்புலிகள் வேறு அல்லர் என இதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் தெரிவிப்பதை எதிர்க்கும் அதிமுக் பொதுச் செயலர் ஜெயலலிதா தனது செயலுக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.இல்லையெனில் அவரை எதிர்த்து பிரசாரம் மேற்கொள்ளப்படும். (அ-5)

## சத்துணவு வழங்கலும் கண் பரிசோதனையும்

கொக்குவில் லயன் கழகத்தினால் கடந்த 7ஆம் திகதி கொக்குவில் மருந்தகத்தில் 200 பேருக்கு சத்துணவு வழங்கப்பட்டது.

இன்று கோண்டாவில் அரசினர் மருந்தகத்தில் காலை 9.30 மணிக்கு கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துணவு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கொக்குவில் கிராம முன்னேற்ற சங்கத்தின் பணிமனையில் (RDS) சிறுவர்களுக்கான கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும், சத்துணவு வழங்கலும் இடம்பெறுமென பிராந்தியத் தலைவர் லயன் கே.எம்.பத்மநாதன் தெரிவித்துள்ளார். (அ)

## இராசிபலன்

12.11.2007
(ஐப்பசி 26, திங்கட்கிழமை)
துதியை முற்பகல் 08.37 மணிவரை
கேட்டை பின்னிரவு 05.54 மணிவரை
இராகுகாலம் 07.36-09.06 மணிவரை
சுபநேரம் 12.06-01.36 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அஜீரணக் கோளாறு, வாகனபயம், முயற்சி தாமதம், போசனசுகம். |
| இடபம் | நல்ல வரவேற்பு, எடுத்த காரியம் கைகூடும், பொருள்சேர்க்கை, போசனசுகம். |
| மிதுனம் | அதிக பிரயாசை, உடல்நலம், பணவருவாய், நண்பர்கள் உதவி. |
| கடகம் | தொழில் சிந்தை, குடும்பக்கவலை, கௌரவக்குறைவு, பணக்குறைவு. |
| சிங்கம் | தாய்வழிஉறவு, தொழிலில் ஆர்வம், சுபசெலவு, முயற்சிதாமதம். |
| கன்னி | பாராட்டு, காரிய அனுகூலம், உறவினர் உதவி, போசனநன்மை. |
| துலாம் | கடின வார்த்தை, காரியதாமதம், மரியாதைக்குறைவு, பணக்குறைவு. |
| விருச்சிகம் | தெய்வசிந்தை, நல்ல முயற்சி, விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | திடீர்பயணம், காரிய தாமதம், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| மகரம் | பெருமையடைதல், தொழில் நன்மை, குடும்ப சுகம், சுபநிகழ்வு. |
| கும்பம் | நல்ல முயற்சி, தூரதேசச் செய்தி, போசன நன்மை, ஆரோக்கியம். |
| மீனம் | கட்டுப்பாடு, புதியமுயற்சி, பிரயாணம், எதிர்பாராத செலவு. |

வ ள வ ன்

# வீதி விபத்துக்களால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ரூபா 10 மில்லியன் செலவு

ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 2500 மரணங்களை ஏற்படுத்துகின்ற வீதி விபத்துக்களில் 30சதவீதமானவர்களுக்கு போதிய நித்திரையின்மையும் சோர்வுமே காரணமாகும் என்று உலக சுகாதார ஸ்தாபனமும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை இங்கிலாந்து போன்ற வளர்ந்த நாடுகளில் கிட்டத்தட்ட 20 சதவீதம் மட்டுமே என்று முன்னாள் சுகா தரப் பணிப்பாளரும், முன்னாள் தேசிய போக்கவரத்து மருத்துவ நிறுவகத் தலைவருமான டாக்டர் காமினி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார். இந்த ஆய்வில் சாரதிகளுக்கு கூடுதலான வேலைப்பளுவைக் கொடுக்கக்கூடாதென்றும் ஒரு சர்வதேச ரீதியான வழிகாட்டல் ஒழுங்கு முறையைச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு சாரதி குறைந்தது 8 மணித்தியால ஓய்வு எடுக்க வேண்டும். அத்துடன் 8 மணித்தியாலய தொடர் வாகன செலுத்துகைக்குப்பின் 30 நிமிடம் ஓய் வெடுக்க வேண்டும். இவை தெற்காசிய நாடுகளில் கவனத்தில் கொள் ளப்படுவதில்லை.

சாரதிகள் ஒருநாளில் 13-14 மணித்தியாலங்கள் தொடர்ந்து ஓய்வெடுக்காமல் வாகனம் ஓட்டுகின்றார்கள். இது எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்கத் தக்கதல்ல.


அத்துடன் 35முதல் 45 வயதுக்கிடைப்பட்ட சாரதிகள் தெற்காசியாவில் மிகவும் மோசமானவர்களாகக் காணப்படுகின்றனர். இலங்கையிலும் அநேக எண்ணிக்கையிலான வித்துக்களுக்கு இந்த வயதிற்குட்பட்ட சாரதிகளே காரணமாகவுள்ளது. மதிப்பீட்டின்படி இலங்கையில் விபத்துக்களினால் நாளொன்றிற்கு 6-7 வரையிலானவர்கள் இறப்பதுடன் வருடத்திற்கு 10 பில்லியன் ரூபாய்கள் அரசுக்கு செலவாகின்றது. (அ-6)







பாமாகிறியேசன் அளிக்கும் கவிஞர் துரையரின் "இந்து தர்மத்தில் பத்துக்கள்" சின்னத்திரை இறுவட்டு அறிமுக விழா சமீபத்தில் சுன்னாகத்தில் துரையரின் இல்லத்தில் நடந்த போது தலைமை வகித்த மயிலணி பிரம்மஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்களும், நயப்புரை வழங்கிய பிரமஸ்ரீ கு.தியாகராசக்குருக்களும், பிரதியைப் பெற்று ஆசிவழங்குவதையும், வலம்புரி பத்திரிகை நிர்வாக இயக்குநர் எஸ்.வெற்றிவேலாயுதம் வாழ்த்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.



பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ சுவாமி கோவில்

**கந்தசஷ்டி மகோற்சவம்**

மூன்றாம் நாள் - 12.11.2007

இலை யென் நிரங்கி யிரக்கப் புகுந்து
நிலையொன்றி நீ வருந்தவேண்டாம் அலையொன்றி
மன்னுதுறைக் கந்தவனத் தருகே யாறுமுகப்
பொன்மலை யொன்றுண்டங்குப் போ

அமரர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்


# இன்னும் 9 ஆண்டுகள் விளையாடுவேன் டென்னிஸ் வீரர் பெடரர் நம்பிக்கை

டென்னிசில் முடிசூடா மன்னனாக வலம் வந்துகொண்டிருக்கும் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தரவரிசையில் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்.

டென்னிசில் பல சாதனைகளை படைத்து விட்ட 26 வயதான பெடரரிடம் ஓய்வு குறித்து நேற்று கேட்டபோது, இன்னும் நீண்டகாலம் விளையாட முடியும் என்றுதான் நம்புவதாக குறிப்பிட்டார். 35 வயதுவரை விளையாட முடியும் என்ற கருத்தையும் வெளிப்படுத்தினார். சூதாட்டத்தில் ஈடுபடும் டென்னிஸ் வீரர்களுக்கு அபராதமோ அல்லது தடையோ விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (அ-5)

# இலங்கை அணிக்கு வீரர்கள் தெரிவு முறையானதாக இல்லை - அத்தப்பத்து

இலங்கை கிரிக்கெற் அணி தேர்வாளர்கள் பொம்மைகள், தேர்வுகுழு கோமாளி தலைமையில் செயல்படுகிறது என்று தொடக்க ஆட்டக்காரர் அத்தப்பத்து கடுமையாக சாடியுள்ளார்.



இலங்கை அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெற் போட்டி பிரிஸ்பேனில் நடந்துவருகிறது. இதில் முதல் இன்னிங்சில் இலங்கை அணி தொடக்க ஆட்டக்காரர் அத்தப்பத்து அதிகபட்சமாக 51 ஓட்டங்கள் எடுத்தார். 2ஆவது இன்னிங்சில் 16 ஓட்டங்கள் சேர்த்தார்.

முன்னதாக அத்தப்பத்து அளித்த ஒரு பேட்டியில் தேர்வு குழுவினரை கடுமையாக சாடியுள்ளார். அவர் கூறியிருப்பதாவது, தற்போது இலங்கை கிரிக்கெற் அணி சரியான திசையில் போகாமல் தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. குறிப்பாக இதற்கு காரணம் பொம்மைகள் போன்ற தேர்வாளர்கள் கோமாளி தலைமையில் செயல்படுவது தான். அணிக்கு வீரர்கள் தேர்வு செய்யும் விதம் முறையானதாக இல்லை.

தேர்வாளர்கள் சரியில்லை. தேர்வாளர்கள் முறையாக தேர்வு செய்து இருந்தால் சிறந்த பின் வரிசை வீரர்களை உருவாக்கி இருக்க முடியும். தவறான தேர்வால் தற்போது 37,38 வயதுக்கு பிறகே வீரர்கள் இலங்கை அணிக்கு ஆடவரும் நிலை உள்ளது. தேர்வாளர்கள் வெளிநாட்டுக்கு பயணம் செய்வதை கவனத் தில் கொண்டு செயல்பட்டு தங்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள்.

இலங்கை அணி வீரர்கள் ஓய்வறையில் மகிழ்ச்சியாக இருக்கிறோம். நாங்கள் ஒற்றுமையுடன் உள்ளோம். எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் ஒரு சிலர் நாங்கள் பிளவுபட்டு இருப்பதுபோல் சித்தரிக்க முயற்சிக்கிறார்கள். வெளியில் உள்ள சிலர் பத்திரிகைகள் மூலமும் முன்னாள் வீரர்கள் மூலமும் எங்களுக்குள் பிளவு ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அவர்களின் முயற்சி பலிக்காது.

எங்கள் அணி வீரர்கள் தங்கள் திறமைக்கு தகுந்தபடி முதல் இன்னிங்சில் விளையாடவில்லை. பிரெட்லீ எல்லா துடுப்பாட்ட வீரர்களுக்கும் சவாலாக விளங்கக் கூடியவர். அவரது பந்து வீச்சை எதிர்கொள்கையில் அனுபவித்து ஆடினேன். அவரது ஒவ்வொரு பந்து வீச்சும் வித்தியாசமான சவாலாக இருந்தது. இவ்வாறு அத்தப்பத்து கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெற் அணியின் தேர்வு குழு தலைவராக அஷாந்தா டி மெல் உள்ளார். தேர்வாளர்களாக டான் அனுராஸ்ரீ, ரஞ்சித் மதுரசிங்கே, ஜெயந்தா செனவிரத்னே ஆகியோர் செயல்பட்டு வருகிறார்கள். 36 வயதான அத்தப்பத்து 2 ஆண்டுகளுக்கு பிறகு டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறார். உலக கோப்பை போட்டியில் ஆடும் லெவனில் சேர்க்காததால் அணியில் இருந்து விலகிய அவர் 6 மாதத்துக்கு பிறகு இலங்கை விளையாட்டுத்துறை மந்திரியின் வேண்டுகோளை ஏற்று சர்வதேச போட்டிக்குத் திரும்பினார். (அ-5)

# ஒருநாள் போட்டி வெற்றியின் பரிசாக மலிக்கின் பதவி மேலும் ஓராண்டு நீடிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் தலைவராக மேலும் ஓராண்டிற்கு சோயிப் மலிக் நீடிக்கப்பட்டுள்ளார். உலகக் கோப்பையுடன் ஒருநாள் போட் டியில் இருந்து இன்சமாம் விலகியதையடுத்து அணித் தலை வராக இளம் வீரர் சோயிப் மலிக் தேர்வு செய்யப்பட்டர்.

உள்ளூரில் தென்னா பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் தோல்வியுற்றது. இதையடுத்து, மலிக்கின் பதவி ஆட்டம் கண்டது. எனினும் இந்தியாவுக்கு எதிரான தொடருக்கும் அவர் தலைவராக தொடர்ந்தார்.

மொகாலியில் கடந்த 8ஆம் திகதி நடந்த 2ஆவது ஒருநாள் போட்டியில் 321 ஓட்ட இலக்குடன் விளையாடிய பாகிஸ்தான் அணி 5 விக்கெற் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்த வெற்றிக்கு பரிசாக அணித்தலைவர் சோயிப் மலிக்கின் பதவி மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, பாகிஸ்தான் கிரிக்கெற் சபைத் தலைவர் நசீம் அஷ்ரப், கராச்சியில் கூறியதாவது,

அணித்தலைவர் சோயிப் மலிக்கின் செயல்பாடுகள் திருப்திகரமாகவுள்ளது. அவரது தலைமையில் சகவீரர்கள் சிறப்பாக விளையாடுகின்றனர். மலிக்கின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாக மூத்த வீரர்கள் கூறியுள்ளனர். மொகாலியில் இந்தியாவுக்கு எதிரான வெற்றி எங்களை பிரம்மிக்க வைத்துள்ளது.

**விளையாட்டுச் செய்திகள்**

இந்திய ரசிகர்கள் முன் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பது சுலபமான காரியம் அல்ல. இந்த வெற்றியின் பரிசாக, மலிக்கின் அணித்தலைவர் பதவியை மேலும் ஓராண்டிற்கு நீடித்துள்ளோம். (அ-5)

# சாதனைபடைத்த மைதானத்தில் தலைவராக களமிறங்கிறார் கும்ளே

(பெங்களூர்)

பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை கைப்பற்ற தேவையான கிரிக்கெற் தந்திரம், வெற்றி மந்திரமும் தெரியும் என்கிறார் அணித் தலைவர் கும்ளே.

இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதன்பின்னர் மூன்று போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவிருக்கிறது. இதற்கு இந்திய அணியின் தலைவராக சுழற்பந்து வீச்சாளர் அனில்கும்ளே நியமிக்கப்பட்டுள்ளார். இத் தொடரை கைப்பற்ற தேவையான கிரிக்கெற் தந்திரம் மற்றும் வெற்றி மந்திரம் தெரியும் என்கிறார் இவர். இது குறித்து 37 வயதான கும்ளே அளித்த பேட்டி.

தீபாவளி அன்று அணித்தலைவராக நியமிக்கப்பட்டது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இதை தீபாவளி பரிசு என்றே சொல்லலாம். இது எனக்கு எந்த ஆச்சரியத்தையும் அளிக்கவில்லை. சச்சின் அணித்தலைவர் பதவியை ஏற்காததையடுத்து தேர்வுக்குழுவினரின் பார்வை என்மீது திரும்பியது. 17 ஆண்டுகளாக கிரிக்கெற் விளையாடி வருகிறேன். அணித் தலைவர் பதவி தாமதமாகக் கிடைத்துள்ளது என நினைக்கவில்லை. கிடைக்காமல் போவதை விட தாமதமாக வந்தது மகிழ்ச்சியளிக்கிறது. அணித்தலைவராக களமிறங்குவதில் ஆர்வமாக இருக்கிறேன்.

ஒவ்வொரு அடியாக முன்னேற முயற்சி செய்கிறேன். அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவுடனான டெனிஸ் தொடருக்கு அணித்தலைவராக தேர்வு செய்யப்படுவேனா என்பது தேர்வாளர்கள் கையில்தான் இருக்கிறது.

இந்திய அணியின் தலைவராக ஒரு பந்து வீச்சாளர் இருப்பது மிகவும் கடினமான காரியம். சில விநோதமான காரணங்களுக்காக பதவிக்கு பந்துவீச்சாளர்களை நியமிக்க தேர்வுக்குழு தயங்கிவருகிறது. என் மீது ரசிகர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்றுவேன். அதற்குத் தேவையான முழு முயற்சிகளை



மேற்கொள்வேன். பந்துவீச்சாளர் என்ற முறையில் கிரிக்கெற் தந்திரம் மற்றும் வெற்றி மந்திரம் தெரியும். இது தலைமைப் பொறுப்பேற்கும் போது நன்றாகக் கைகொடுக்கும். 8ஆண்டுகளுக்கு முன் டில்லியில் பாகிஸ்தானுக்கு எதிராக 10விக்கெற் வீழ்த்தி சாதனை படைத்தேன். இம்முறை அதே மைதானத்தில் பாகிஸ்தானுக் கெதிராக அணித் தலைவராக களமிறங்குவது உற்சாகமளிக்கிறது. தொடர்ந்து சிறப்பாக விளையாட முயற்சிப்போம். உறுதியான அணியை விரைவில் உருவாக்குவோம்.

இருபது -20தொடருக்குப் பின் தான் இந்திய அணி ஆக்ரோஷமாக இருக்கிறது எனக் கூறமுடியாது. வீரர்கள் மைதானத்தில் எப்போதும் துடிப்புடன் இருப்பது வரவேற்கத்தக்கது. வார்ன் மற்றும் முரளிதரன் சாதனைகளை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அணியின் வெற்றிக்கு துணை நிற்பதே எனது குறிக்கோள். இவ்வாறு கும்ளே தெரிவித்தார். (அ-5)

# அண்டை நாட்டில் அமைதியை நிலைநாட்ட இந்தியா அழைக்கப்படலாம் என்கிறார்

## இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சு ஏ.கே.அந்தோனி

அண்டை நாட்டில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை நிலைநாட்ட இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்படலாம் என மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி சனிக்கிழமை தெரிவித்தார்.

அந்தோனி தனது பேட்டியின் போது அண்டை நாடு என்று மட்டுமே கூறினார். அண்டை நாடு எது என்பதை பெயரைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. இருப்பினும் பாகிஸ்தானில் நிலைகொண்டுள்ள அரசியல் நெருக்கடிநிலையைக் கருத்தில் கொண்டு தான் அவர் பேசியிருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

மேலும் அவர் கூறியது, ஆசியக் கண்டத்தில் இந்தியாவின் செயல்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியாவிடமிருந்து பிறநாடுகளின் எதிர்பார்ப்பு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அதே நேரத்தில் இந்தியாவின் பொறுப்பும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இதுபோன்ற சூழ்நிலையில் தங்களது விருப்பத்தை மட்டுமன்றி பிறநாடுகளின் விருப் பத்தையும், எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்து வைக்கக் கூடிய மாபெரும் கடமை இந்தியாவுக்கு உண்டு. இதனால் தங்களது பாதுகாப்புப் பலத்தை வலுப்படுத்திக்கொள்ளவேண்டிய நிர்பந்தம்.

தீவிரவாதம் என்பது இந்தியாவுக்கு நீண்ட கால அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதை இந்தியா சவாலாகவே நினைக்கிறது. தீவிரவாதத்தின் எல்லை சர்வதேச அளவில் விரிந்துள்ளது. அதை வளர்க்க சர்வதேச அளவிலும் நிதி புரள்கிறது. எனவே தீவிரவாதத்தின் மூலம் எது என்பதை துல்லியமாகக் கண்டறிவதும் கடினமாகவுள்ளது.

தீவிரவாதிகளின் கைகளில் அணு மற்றும் உயிரியல் வேதிப்பொருள் ஆயுதங்கள் தற்போது எளிதாகக் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. இது வருத்தம் அளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. எதிர்காலத்தில் தீவிரவாதத்தை துணிந்து சந்திக்க நம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது காலத்துக்கு தகுந்தவாறு பாதுகாப்பு முறைகளை மாற்றி அமைத்து அதை தொடர்ந்து ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். பாதுகாப்புத் துறையில் ஊழல் என்பதை எவ்விதத்திலும் சகித்துக் கொள்ள முடியாது என்றார் அந்தோனி. (அ-5)

# மரண தண்டனையை ரத்துசெய்ய கோரும் தீர்மானம் ஐ.நா.சபையில் அடுத்த வாரம் தாக்கல் ஆகிறது

உலகின் பல்வேறு நாடுகளில் மரண தண்டனைக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. மனித உரிமையை மீறும் இந்த தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று சமூக நல அமைப்புகள் வற்புறுத்தி வருகின்றன.

இந்நிலையில் உலக நாடுகளில் மரண தண்டனையை ரத்து செய்யக் கோரும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படுகிறது.

192 உறுப்பினர்களை கொண்ட ஐ.நா. சபையில் இந்த தீர்மானத்துக்கு 81 உறுப்பு நாடுகள் ஆதரவாக இருக்கின்றன. அதே சமயம் மரண தண்டனைக்கு சிங்கப்பூர் தலை மையிலான நாடுகள் அணி ஆதரவு தெரிவித்துள்ளது.

மரண தண்டனை என்பது மனித உரிமை மீறல் ஆகாது. அது கிரிமினல் நீதிமுறை. இது பற்றி அந்தந்த நாடுகள் தான் முடிபு செய்ய வேண்டும் என்று சிங்கப்பூர் கூறியுள்ளது.

ஐ.நா. சபையின் தீர்மானங்கள் உறுப்பு நாடுகளை சட்டப்படி கட்டுப்படுத்தாது என்ற போதிலும் மரண தண்டனைக்கு எதிராக ஐ.நா.வில் வாக்கெடுப்பு நடைபெறுவது சர்வதேச அளவில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. உலகில் 125 நாடுகளில் மரண தண்டனைக்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் 25 நாடுகளில் மட்டுமே இந்த தண்டனை செயல்படுத்தப்பட்டது. (அ-5)

# முகம் பார்க்கும் கண்ணாடி பெண்களுக்கு உயிர் நாடி?

(லண்டன்)

மனிதர்கள் தங்கள் முக அழகை தாங்களே பார்த்து ரசித்துக்கொள்ளும் தன்மை உள்ளவர்கள் ஆண்களை விட பெண்கள் தான் இந்த விஷயத்தில் மிக ஆர்வம் கொண்டவர்கள். ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் கண்ணாடியில் தங்கள் முகத்தை பார்த்து சரி செய்து கொள்கின்றனர்.

இது தொடர்பாக நடந்த ஆய்வில் தெரிய வந்துள்ள சுவாரஸ்யமான தகவல்கள் பெண்கள் ஒரு நாளில் அவர்கள் தூங்கும் எட்டு மணி நேரம் தவிர 16 மணி நேரத்தில் சராசரியாக 34 முறை தங்களின் முகத்தை சரிபார்த்துக் கொள்கின்றனர். அதிகபட்சமாக 71 முறையும் குறைந்த பட்சமாக எட்டுமுறையும் பெண்கள் தங்கள் முகத்தை கண்ணாடியில் பார்த்து சரி செய்து கொள்கின்றனர். தூங்கி விழித்ததும் அவர்கள் பார்ப்பது தங்கள் முகத்தைத் தான்.

அவர்கள் காலையில் போடும் மேக்-அப்பை ஒரு நாளில் 11 முறை திருத்திக் கொள்கின்றனர். பெண்களில் 89 சதவீதம் பேர் தங்கள் கைப்பையில் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்துள்ளனர். இந்த விஷயத்தில் பெண்களுக்கும் ஆண்களும் இளைத்தவர்கள் இல்லை. ஆண்கள் ஒரு நாளுக்கு 27 முறை கண்ணாடி முன் நிற்கின்றனர். ஆண்கள் மற்றும் பெண்கள் இருதரப்பினரும் 27வது வயதில் தான் தங்



கள் முக அழகில் பெரிதும் ஆர்வம் செலுத்துகின்றர். இந்த வயதில் ஒரு நாளுக்கு சராசரியாக 52 முறை கண்ணாடி பார்த்து முகத்தை திருத்திக் கொள்கின்றனர். 60 வயதுக்கு மேற்பட்டோர். ஒரு நாளுக்கு சராசரியாக ஐந்து முறை மட்டுமே கண்ணாடி பார்க்கின்றனர். ஆறுதலாக ஒரு கொசுறு தகவல் இந்த சர்வே எடுக்கப்பட்டது. பிரிட்டனில் ஆனால் பிரிட்டீஷாருக்கு நாங்களும் இளைத்தவர்கள் இல்லை தான். (அ-5)

# குரு பெயர்ச்சி



## மீனம்

பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய

# உங்களுக்கு எப்படி?

**16.11.2007 முதல் 30.11.2008 வரை**

பெயரின் முதல் எழுத்துக்கள்: தீ,து,ஓ,ஸ்ரீ, தே,தொ,க உள்ளவர்களுக்கும்.

### பதவிகளில் மாற்றம் தரும் பத்தாமிடத்துக் குரு

எல்லோரிடமும் 'நல்லவர்' என்று பெயரெடுத்துக் கொள்ளும் மீனராசி நேயர்களே!

மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் உங்களுக்கு பத்தாமிடத்தில் குரு சஞ்சரித்துப் பலவிதமான மாற்றங்களைச் செய்யப் போகிறார்.

நீங்கள் எதிர்பார்த்த மாற்றம் வருமா? எதிர்பாராத மாற்றம் வருமா? என்பதையெல்லாம் உங்கள் தசாபுத்தியைப் பொறுத்தே இருக்கிறது. குரு உங்களுக்கு ராசிநாதன்.எனவே பெரும்பாலும் அவர் தனது ராசிக்காரர்களுக்கு நல்ல மாற்றங்களையே வழங்குவார் என்று நம்பலாம். வக்ர காலத்தில் மட்டும் விழிப்புணர்ச்சி கூடுதலாக காட்டினால் வாழ்க்கைப் பயணத்தில் எந்தத் தடையும் ஏற்படாது.

இதுவரை 9ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்த்து உன்னதமான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த குரு பகவான் நவம்பர் 16ஆம் திகதி முதல் செயல் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.

சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் குருவை வந்தவுடன் வரவேற்றுக் கொண்டாடினால் எந்த நாளும் இனிய நாளாக மாறும் அல்லவா? பொதுவாக அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு முக்கிய பொறுப்புகளில் மாற்றம் கிடைக்கும்.

முன்னேற்றத்தில் ஒரு சிலருக்கு பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். தக்க விதத்தில் செல்வ படயம் தடைகள் வாராதிருக்கவும், குருவின் பார்வை பதியும் இடங்கள் உங்களுக்கு கை கொடுக்கும்.

### யோசித்து செயல்படுவதால் யோகங்கள் வந்துசேரும்!

நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசிப்பீர்கள். யோசிப்பதோடு மட்டுமல்லாமல் பிறரிடம் யோசனைகளையும் கேட்டு ஒரு நல்ல முடிவை தேர்ந்தெடுப்பீர்கள். அதனால் தான் உங்களுக்கு யோகங்கள் வந்து சேருகின்றன. உங்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள பலரும் பிரியப்படுவர்.

நீங்கள் யாரிடம் போய்ச் சேர்ந்தாலும் அவர்களுக்கும் நன்மை கிடைக்கும். அவர்களால் உங்களுக்கும் நன்மை கிடைக்கும். தெய்வ பக்தியும், தேச பக்தியும் உங்களிடம் இணைந்தே இருக்கும். தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். இருக்கும் இடத்தை அழகாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் விருப்பம் காட்டுபவர்கள் நீங்கள்.

சுறுசுறுப்பாக செயல்பட்டு சொல்லை செயலாக்கிக் காட்டுபவர்களின் மத்தியில் முதலிடம் பிடிப்ப வர்கள் நீங்கள் தான். எந்தப் பிரச்சினை உங்கள் வாழ்வில் வந்தாலும் அத்தனையிலும் வெற்றி பெற வைப்பது 'குருவருள்' ஒன்றுதான் என்பதைக் கண்டு கொள்வீர்கள்.

சுக்ரன் உங்கள் ராசிக்கு அஷ்டமாதிபதியாக விளங்குவதால் குடும்பப் பிரச்சினைகள் உங்களுக்கு கூடுதலாகவே இருக்கும். எனவே பொருத்தம் பார்த்து செய்யும் திருமணத்தில் தான் பொன்னான வாழ்க்கையை நீங்கள் அமைத்துக்கொள்ள இயலும்.உங்கள் ராசிநாதன் வியாழன் 'புத்திரகாரகன்' என்று வர்ணிக்கப்படுகிறார். சுப கிரகமாக விளங்கும் அதன் சார பலத்திற்கேற்ப படிப்பு, தொழில் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்தால் பார் போற்றும் வாழ்வமையும். மேலும் அதற்கு நட்புக்கிரக எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால் தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

### கல்யாணக் கனவுகள் நனவாகும் நேரம்!

உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன.

வாக்கு,தனம்,குடும்பம், நட்பு, உறுதி, சுகம், வர்த் தகம், செல்வம் சேர்க்கும் முயற்சி, அதிர்ஷ்ட வாய்ப்புகள், தாய், தனது வீடு, ஆடை-ஆபரணம்,வாகனம்,பயணங்கள்,சேமிப்பு, விலங்குவளர்ப்பு, எதிரிகள்,அலைச்சல், வியாதி, கடன், வீண்பழி, மனக்கவலை, திடீர் தாக்குதல், விரயங்கள், சகோதர கருத்து வேறுபாடு, அதிகாரம் செலுத்துதல் போன்ற அனைத்துப் பொறுப்பும் குரு கையில்தான் இருக்கிறது. அதன் பார்வையைப் பலப்படுத்தினால் மேற்கண்ட செயல்களிலெல்லாம் வெற்றி கிடைக்கும்.

குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் கூடும். வாயில் தேடி வந்து திரும்பிச் சென்ற வரன்கள் மீண்டும் வந்து சேரலாம்.

பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணப் புழக்கம் அதிகரிக்கும். கொள்கைப் பிடிப்போடு செயல்படும் சூழ்நிலை அமையுமா? என்பது சந்தேகம் தான்.அருகிலிருப்பவர்களை அனுசரித்து சென்றால் அத்தனை காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

### விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்தில் பதிவதால் சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். சுற்றத்தார் மதிக்கும் அளவு வாழ்க்கைத் தரம் உயரும். எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி பெறுவீர்கள். தாய் வழி நன்மைகள் வந்துசேரும். கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடும் வாய்ப்பு உண்டு. வீடு கட்டியவர்கள் வெளியிடங்களில் சொத்துக்களை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

ஆடை-ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். விசுவாசத்தோடு பணியாளர்கள் நடந்துகொள்வர். விலங்கு வளர்ப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். வாகன மாற்றம் செய்ய முன்வரும் நேரமிது. வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கலாம். புதிய வாகனங்கள் வாங்க முன்வருபவர்கள் அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் வாங்குவது நல்லது.

### எதிரிகளை உதிரிகளாக்கும் குருவின் பார்வை

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 6 ஆம் இடத்தில் பதிவதால் அங்குள்ள சனியையும், அவர் பார்க்கிறார். எனவே எதிர்ப்புகள் அகலும். இதுவரை உங்களுக்கு தொல்லை கொடுத்தவர்கள் இனி தோள் கொடுத்து உதவுவர். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் வந்து சேரும். உயரதிகாரிகளின் ஆலோசனைப்படி நடந்துகொள்வது நல்லது.நீண்ட நாளாக எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும்.

கடன் வாங்கி மன அமைதியின்றி தத்தளித்த உங்களுக்கு இனி பணத் தேவைகள் பூர்த்தியாகும்.செய்யும் செயல்களுக்கு முன்னதாகவே பணம் வந்து சேரும். பகையான நட்பு உறவாகி பலவித நன்மைகளைக் காணப் போகிறீர்கள். தூர தேசத்திலிருந்து அழைப்புகள் வந்து சேரலாம்.

தொல்லைகள் அகலவும், நல்ல காரியங்கள் நாளும் நடைபெறவும், சுய ஜாதகத்தில் குரு மற்றும் சூரியன் இருக்கும் பாதசார பலம் அறிந்து அதற்கேற்ற ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் வேகமாக முன்னேற்றம் காணலாம். வேண்டிய அளவிலும் பொருளாதார நிலையில் உயர்வு காணலாம்.

மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறவும், மணிவிழா, மணவிழா இல்லத்தில் நடைபெறவும், கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கவும், குழந்தைகள் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் அனுகூலமாகவும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து ஆதரவுக்கரம் நீட்டவும், குருவின் பார்வை உங்களுக்கு கைகொடுக்கப் போகிறது. எனவே 10ஆம் இடத்துக் குருவை பற்றிய பயத்தை மனதில் பதித்துக்கொள்ள வேண்டாம். நல்லதே குரு நடக்க வைப்பார்.

### மகர குருவால் ஏற்படும் மாற்றம் 23.04.2008 முதல் 04.06.2008 வரை

தனுசு ராசியில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஏப்ரல் மாதம் மகர ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவேசகோதரத்தால் யோகம் வரும். தக்கவிதத்தில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

பிள்ளைகளின் கல்யாண கனவு, கல்விக் கனவுகளை நிறைவேற்றுவீர்கள். பிறர் போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். குல தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வெளிநாடு தொடர்பு அனுகூலம் தரும்.தாமதித்த காரியங்கள் தடையின்றி நடைபெறும்.

### வளர்ச்சியைக் கூட்டும் வார வழிபாடு

வியாழக்கிழமை தோறும் சிவபெருமானையும், மீனாட்சி அம்மனையும், குரு தெட்சிணாமூர்த்தியையும் வழிபட்டு வந்தால் வியக்கும் அளவிற்கு வாழ்க்கை உயரும்.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

10 இல் சஞ்சரிக்கும் குருவால் பண வரவு பெருகவும், பதவிகள் நினைத்தபடி அமையவும், பாராட்டு மழையில் நனையவும் தஞ்சாவூர் சென்ற ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயத்தில் உள்ளவிநாயகர்சுவாமிஅம்மன், நந்தி, வராஹி, தெட்சிணாமூர்த்தியையும் வழிபடுவதோடு அருகில் உள்ள தென்குடி திட்டை ஸ்ரீ பசுபதி நாதர் ஆலயத்தில் உள்ள குருவையும் வழிபட்டு வாருங்கள். எல்லா நாட்களும் இனிய நாட்களாக மாறும்.

### குரு மாற்றம் பெரும் மாற்றமா?

குரு உங்கள் ராசிக்கு அதிபதியாகவும், 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர். ஆரோக்கியத்திற்கும், அணி திகழும் வாழ்க்கைக்கும், சீரோடும்-சிறப்போடும் வாழ வழி வகுக்கும் தொழில் ஸ்தானத்துக்கும் அதிபதியான குரு இப்போது தனது சொந்த வீட்டிலேயே சஞ்சரித்த சொல்லை செயலாக்கிக் காட்டப் போகிறார். குறிப்பாக 10இல் குரு வந்தால் பதவி பறிபோகும் என்பது பழமொழி. பதவி இல்லாதவர்களுக்கு பதவி கிடைக்கும். பதவியில் இருப்பவர்களுக்கு பதவியில் மாற்றம் வரும்.

பாவக் கிரகங்களின் பார்வையோடும், தெசாபுத்தி வலுவிழந்த நிலையிலும் சுயஜாதகம் அமைந்தவர்களுக்கும் பதவி பறிபோகும் நிலை ஏற்படலாம்.

பத்தில் குரு வந்தால்
பதவியினில் மாற்றம் வரும் !
முத்தான குடும்பத்தில்
முன்னேற்றம் கூடிவரும் !
சொத்து சுகம் சேரும்
சொந்தங்கள் பாராட்டும் !
தத்தளிக்கும் நிலை அகல
தக்க துணை குருவாகும் !

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் 10இல் குரு வந்தால் பல விதமான மாற்றங்கள் இயற்கையாகவே வந்து சேரும். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். வசதி,வாய்ப்புக்களைக் கொடுக்க குருவின் பார்வை பலம் இருக்கிறது. குரு பார்க்க கோடி நன்மை அல்லவா? எனவே அதன் அருட் பார்வையில் வியாழன் தோறும் நின்று குரு கவசம் பாடுங்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம் 05.04.2008 முதல் 20.09.2008 வரை

குரு வக்ர காலம் வரும்போது எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டினால்தான் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும். குறிப்பாக ஆரோக்கியத்தை பராமரிக்க அதிகம் செலவிடும் சூழ்நிலை உருவாகும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ளலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்கினால் நிலை உயரும் வாழ்க்கை அமையும்.

விரயங்களில் இருந்தும் தப்பிக்கலாம். தொழில் கூட்டாளிகளை மாற்றும் எண்ணம் மேலோங்கும்.இடமாற்றம், ஊர்மாற்றம், பதவி மாற்றம் வந்துசேரும் நேரம் இது.

மீன ராசிப் பெண்களுக்கு மிகப் பெரிய மாற்றம் வரும்.மீன ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குரு பெயர்ச்சியால் மிகச் சிறந்த மாற்றங்கள் வந்து சேரும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் யாவற்றையும் அமோகமாக நடத்துவீர்கள். பெற்றோர் வகையிலும், மற்ற சான்றோர்கள், ஆன்மீக பெருமக்களிடமும், ஆலோசனைகளை கேட்டு அதற்கேற்ப வாழ்க்கைப் பாதையை சீராக்கிக் கொள்வது நல்லது.

கணவன்-மனைவி உறவில் திடீர், திடீர் என வாக்குவாதம் ஏற்பட்டு பிறகு அன்பு கூடும். உங்கள் பெயரிலேயே மூலதனமிட்டு தொழில் தொடங்கும் வாய்ப்புகள் ஏப்ரலுக்கு மேல் உருவாகலாம். வேலை மற்றும் உத்தியோகத் துறையில் இருப்பவர்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும்.

குருவின் வக்ர காலத்தில் வழிபாடு அவசியம் தேவை. குறிப்பாக தெசாபுத்திக்கேற்ப தெய்வத்தை தேர்ந்தெடுத்து வழிபடுவதோடு பௌர்ணமி தோறும் கிரிவலம் வந்தும் கீர்த்தியைக் காணலாம்.

## தியானப் பயிற்சி வகுப்பு

கந்தர்மடம்,18 குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் தியானப் பயிற்சி புதிய வகுப்புகள் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மூன்று மாத காலம் நடைபெற இருக்கும் இப் பயிற்சியினை யாழ்.போதனா வைத்திய சாலை உளவள துணையாளர் நா.நவராஜ் வழங்கவுள்ளார். இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் 13 ஆம் திகதிக்கு முன்னர் வேதாந்தமடத்தில் பதிவுகளை மேற்கொள்ளும் படி யோககேந்திரா நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார்.(அ-6)

## ஆன்மீகச் சொற்பொழிவு

பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாண வேலவ சுவாமி ஆலய மஹோற்சவத்தில் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் 'உதித்தனன் உலகம் உய்ய' எனும் தலைப்பில் வல்லை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் சொற்பொழிவாற்றுவார். (அ)

## கந்தசஷ்டி விரத விஞ்ஞாபனம்

அராலி தறணன் முருகமூர்த்தி தேவஸ்தான சர்வசித்து வருஷ கந்தசஷ்டி கிரியா கால நிகழ்வாக காலை பூசை தினமும் 6 மணிக்கும் 7 மணிக்கு கந்தபுராண, சூரபத்மன் வதை படனமும் பயன்சொல்லலும்,மாலை தினமும் 2.30 மணிக்கு அபிஷேகமும்,3.30 மணிக்கு மூலஸ்தானப் பூசையும்,4மணிக்கு வசந்த மண்டப பூசையும் 5 மணிக்கு வில்வ அர்ச்சனையும் நடைபெறும்.

14 ஆம் திகதி புதன் காலை 8மணிக்கு சூரபத்மன் போர் முனை உலாவும்,15 ஆம் திகதி வியாழன் காலை 5மணிக்கு அபிஷேகமும், 6 மணிக்கு பூசை, பி.ப.2மணிக்கு சூரன்போரும், 5மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும்,16 ஆம் திகதி வெள்ளி காலை 8மணிக்கு வள்ளி அம்மன் திருமணப் படனம், பயன் சொல்லலும்,பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.(அ)

## வைத்தியர் பற்றாக்குறை தீவக மக்கள் பாதிப்பு

(பொன்னாலை)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் இல்லாததால் வேலணை வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் ஆ.திருநாவுக்கரசு அங்கு பதிற் கடமையை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் பதிற் கடமையாற்றி வரும் டாக்டர் ஆ. திருநாவுக்கரசு வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலை,புங்குடுதீவு மாவட்ட வைத்தி யசாலை, மண்டைதீவு மருந்தகம் ஆகியவற்றிலும் கடமையாற்றி வருவதால்,அவர் குறித்த ஒரு வைத்தியசாலையிலிருந்து பூரணமான மருத்துவ சேவையை வழங்கமுடியாதுள்ளதாகவும் இதனால், ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு விரைவில் நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமனம் செய்யுமாறும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.இதேவேளை நயினாதீவு வைத்தியசாலை வைத்திய அதிகாரி விடுமுறையில் கொழும்பு சென்றுவிட்டதாகவும் பதில் வைத்தியர் நியமிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-49)

## சட்டவிரோத மின்பாவனை தடுத்து நிறுத்த வேண்டுகோள்

(பொன்னாலை)

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மின்பாவனைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பிரதேச மட்ட அமைப்புக்கள் விசனம் தெரிவிக்கின்றன.பாதுகாப்பற்ற ஓலைக்குடிசைகள், அரை நிரந்தர வீடுகள் மற்றும் தற்காலிக நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களே சட்டவிரோதமான மின் பாவனைகளில் பெரிதும் ஈடுபட்டு வருவதாகவும் அவ்வமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

தற்போது,பருவமழை ஆரம்பமாகியுள்ளதால் சட்டவிரோத மின்பாவனைகள் மனித உயிர்களுக்கு பெரிதும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. இதனைச் சிறிதளவும் கருத்திலெடுக்காத மக்களே இவ்வாறு சட்டவிரோத மின் பாவனைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

இச் சட்டவிரோத மின்சாரம் மிகவும் பாதுகாப்பற்றதான கட்டுக் கம்பிகள்,முட்கம்பிகள் மற்றும் கம்பிகளைப் பயன்படுத்தி மரங்களில் இலைகள் ஊடாக அவற்றில் தொடுகையுறும் வண்ணம் நீண்டதூரம் பெறப்படுவதால் மழை காலங்களில் மின் ஒழுக்குகள் ஏற்பட்டு உயிர்ப் பலிகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதென்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை வீடுகளில் மின்மானிகள் பொருத்தப்பட்டு சட்டபூர்வமான மின்சாரத்தைப் பெற்றவர்களுக்கும் தமக்கான மின் கட்டணத்தை குறைக்கும் நோக்குடன் வேறு மின் வடங்களையும் பயன்படுத்தி சட்டவிரோதமான மின்பாவனைகளை மேற்கொண்டு வருவதாகவும் சமூகப் பிரதிநிதிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-49)

# முகமாலை முன்னரங்கப் பகுதியில் மூண்ட மற்றொரு கடும் சமர்

"தாக்குதல் நடத்துவது தான்தற்காப்புக்கான மிகச்சிறந்த வழி" இது போர்க்கலை நூல்களில் குறிப்படப்பட்டிருக்கின்ற முக்கியமான அறிவுரையாகும். இந்த அறிவுரையை இலங்கை இராணுவம் முழுமையாகப் பின் பற்ற முனைகின்றது.

விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றுக்கான தயார்படுத்தலில் ஈடுபட்டிருப்ப தாக பல மாதங்களுக்கு முன்னரே இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுதிப்படுத்தியிருந்தது.

இதனால் வன்னியிலும் யாழ். குடாநாட்டி லும் உள்ள படை நிலைகளைப் பாதுகாப்பதற் காக இராணுவம் பல்வேறு உத்திகளையும் கையாண்டு தாக்குதல்களை மேற் கொண்டு வருகிறது.

புலிகளின் பிரதான கட்டளை மையங்கள், ஆயுதக் கிடங்குகள், விநியோக மையங்களைக் குறிவைத்து விமானத் தாக்குதல் நடத்தி அழிவுகளை ஏற்படுத்துவது முதலாவது உத்தி. அடுத்து முன்னரங்க பாதுகாப்பு நிலைகளில் தொடர்ச்சியான தாக் குதல்களையும், தாக்கு தல் நகர்வு களையும் மேற் கொண்டு வலிந்த தாக்குதல்களில் ஈடுபட முடியாதவாறு புலிகளை தற்காப்பு நிலையில் வைத்திருப்பது இரண்டாவது உத்தி.

முதலாவது உத்தியான விமானத் தாக்குதலில் அரச படைகளுக்கு கடந்த 2ஆம் திகதி பாரிய வெற்றி கிடைத்தது.

புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டமையே அது.

இந்த நிலையில் அரசபடைகள் மீது புலிகள் பாரிய தாக்குதலைத் தொடுப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதாக பரவலாக எதிர்பார்க்கப் பட்டு வருகிறது.

பாதுகாப்பு உயர்மட்டம் புலிகள் பெரும் பதிலடி ஒன்றைக் கொடுக்கலாம் என்று படையினரை உஷாராக இருக்கும் படி பணித்திருக் கிறது. அதைவிட இது புலிகள் வழக்கமாகப் பெரும் தாக்குதல் தொடுக்கும் நவம்பர் மாதம் வேறு. இந்த நிலையில் தான் கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை அதிகாலையில் யாழ். போர்முனையில் கடும் சமர் ஒன்று நிகழ்ந்திருக்கிறது. இந்தச் சமரில் படைத் தரப்புக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த படைநகர்வு மேற்கொள்ளப்பட்ட மைக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றை அரசியல் ர்தி யானவை, இராணுவ ரீதியானவை என்று வேறுபடுத்திப் பார்க்கலாம்.

அரசியல் ரீதியான கார்ணங்களை முதலில் பார்க்க முடியும். இந்தத் தாக்குதல் மேற்கொள் ளப்பட்ட தினத்தில் நாடாளு மன்றத்தில் 2008 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தாக்கல் செய்தார்.

இந்தவரவுசெலவுத்திட்டத்தில் அடுத்த ஆண்டில் பாதுகாப்புக்கென கடந்த வருடத்தை விட 20 வீதம் அதிகமான நிதி ஒதுக் கீடு செய்யப் பட்டுள்ளது. பாதுகாப்புச் செல வின அதிகரிப்பு குறித்து நாட்டு மக்கள் மத்தி யில் ஏற்பட்டிருக்கின்ற வெறுப்பைத் தணிக்கவும் விலைவாசி உயர்வினால் திண்டாடும் மக்களைத் திசைதிருப்புவதற் கும் இராணுவ வெற்றிகள் தேவைப் பட்டன.

அடுத்து, கடந்த 7ஆம் திகதி வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது நாடாளுமன்றத்தின் மீது புலிகள் வான் வழியாக வந்து தற்கொலைத் தாக்குதல் நடத்தி தமிழ்ச்செல்வ னின் மரணத்துக்கு பதிலடி கொடுக்கலாம் என்று சிலரால் கருதப்பட்டது. இதுகுறித்து முதல் நாள் நாடாளுமன்றத்திலேயே எச்சரிக்கப்பட்டிருந்ததும் குறிப்படத் தக்கது.

புலிகள் தென் னிலங்கை மீது வான் வழித் தாக்குதல் நடத்தாமல் தடுக்க வேண்டுமாயின் அவர்களின் கவ னத்தை



பலாலி இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகாவை வரவேற்கும் யாழ். படைத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.சந்திரசிறி .படம்:-பாதுகாப்புஅமைச்சு

வடக்கு நோக்கிதிருப்பவேண்டிய தேவை படைத்தரப்புக்கு இருந்தது. இதுகிளாலி- முகமாலை நடவடிக்கையின் இன்னொரு அரசியல் காரணம்.

அடுத்ததாக இராணுவ காரணத்தை எடுத்துப் பார்க்கலாம். யாழ். குடாநாட்டின் மீது புலிகள் பாரிய தாக்கு தல் தொடுக்கலாம்என்று கருதும் படைத் தலைமை இந்தத் தாக்குதல் மூலம் புலிகளின் முன்னரங்க நிலைகளைக் கைப்பற்றி புலிகளின் தாக்குதல் திட்டத்தை ஒத்திப் போடச் செய்யத் திட்டமிட்டிருந்தது.



விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்களுடன் போராளிகள் .படம் :சங்கதி

புலிகளின் முதலாவ்து முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் தொடர்பாக படையினரின் வேவு அணிகள் கொடுத்த தகவலில் - திடீர் தாக்குதல் மூலம் அவற்றைக் கைப்பற்றினால் புலிகளை வளைத்துப் பிடித்து அழித்து பேரிழப்பை ஏற்படுத்தலாம் என்று கூறப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில்தான் கடந்த 7ஆம் திகதி அதி காலை 3.30 மணியளவில் தாக்குதல் நகர்வு ஆரம்பிக்கப் பட்டது. கிளாலி தொடக்கம் முக மாலை வரையான சுமார் 5 கிலோ மீற்றர் நீளமான முன்னரங்க நிலைகள் ஊடாக படையினர் இரகசிய மாக நகர்ந்தனர்.

53ஆவது டிவிசனைச்சேர்ந்த எயார் மொபைல் பிரிகேட் என்றசிறப்புப்படைப் பிரிவுதான் இந் தப் படை நகர்வில் ஈடுபடுத்தப்பட்டது. சிறந்த பயிற்சி களைப் பெற்ற 5ஆவது மற்றும் 6ஆவது கெமுனு வோச், 1 ஆவது விஜயபாகு காலாற்படை பற்றாலியன் கள் என ஒரு பிரிகேட் துருப் புகள் நேரடியாகக் களத்தில் இறக்கப்பட்டன.

அதேவேளை கிளாலி-முகமாலை முன்ன ரங்க நிலைகளின் பாதுகாப்பைக் கவனித்து வரும் 1ஆவது மற்றும் 4ஆவது இலகு காலாற் படை, 4ஆவது கெ முனு வோச், 7ஆவது விஜய பாகு காலாற்படை ஆகிய நான்கு பற்றாலியன்களைச் சேர்ந்த துருப்புக்களும் இந்த நகர்வில் ஈடுபடப் பணிக்கப்பட்டிருந்தனர். எயார் மொபைல் பிரிகேட் துருப்புக்கள் இரகசிய மாகப் புலிகளின் நிலைகளை ஊடுரு விச் சென்று அங்குள்ள புலிகளைச் சுற்றி வளைத்து கொல்வதும் நிலைகளைக் கைப்பற்று வதும் தான் திட்டம். முன்னரங்க நிலைகளில் உள்ள ஏனைய படையினர் உதவிக்கு தாக்குதலில் ஈடுபடுவதுடன் கைப்பற்றிய நிலைகளைப் பலப்படுத்துவதென முடிவு செய்யப் பட்டிருந்தது. புலிகளின் முன்னரங்க நிலைக ளுக்கு முன்பாக கண்ணிவெடி ,பொறிவெடிகள் நிறைந் திருந்தன. இவற்றை அகற்ற இரா ணுவத்தின் பொறியியல் பிரிவு பெங்களூர் டொ பிடோக்களைப் பயன் படுத்தியது.

இரகசியமாக முன்னேறிய படையினர் அதிகாலை 5மணியளவில் நேரடித்தாக்கு தலைத் தொடங்கினர்.

குடாநாட்டின் முக்கிய ஆட்டிலறி நிலைகளில் இருந்து சமநேரத்தில் பளை, இயக்கச்சி, பூநகரி பிரதேசங்களை இலக்கு வைத்து ஷெல்கள் ஏவப்பட் டன. பல் குழல் பீரங்கிகளும், கனரக மோட்டார்களும் செறிவான சூட்டாதரவை வழங்கின.

படையினர் முன்னகரத் தொடங்கி, பொழுது விடிவதற்குள்ளாகவே புலிகளின் முன்னரங்க நிலைகள் படையினரின் கைகளில் வீழ்ந் தன. ஆனால் துருப்புக்களுக்கு ஆச்சரியம் என்னவென்றால் அங்கு புலிகள் எவரும் இருக்க வில்லை.

இதனால் புலிகளை வளைத் துப்



விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்கள் .படம் :-சங்கதி

பிடித்து அழிக்கும் திட்டம் தொடக்கத்திலேயே தோல்வி கண்டது. படையினர் சுமார் 1 கிலோ மீற்றர் தூரம் முன்னகர்ந்து நிலைகளைக் கைப் பற்றியதும் புலிகள் பதிலடியைத் தொடங்கி னர். படையினர் எதிர் பார்த்ததை விட புலிக ளின் எதிர்ப்பு அதிகமாகவும் ஆக்ரோஷமாகவும் இருந்தது. மோட்டார்கள், ஆட்டிலறி களைப் பயன் படுத்தி புலிகள் உக்கிர பதில் தாக்குதலைத் தொடுக்கபடையினர் சிதறி பின் வாங்கும் நிலை ஏற் பட்டது.

இதன்போது புலிகளின் பொறி வெடிகளில் சிக்கி இராணுவப் பொறியியல் படைப் பிரிவு மற்றும் எயார் மொபைல் பிரிகேட் படைப்பிரிவுகளைச் சேர்ந்த பல படையினர் கொல்லப்பட்டதுடன் காயமடையவும் நேரிட்டது.

உள்ளே நுழைந்த இராணுவ அணிகளைத் தனிமைப் படுத்தி சுற்றிவளைத்துப் பிடிக்கும் நோக்கில் புலிகள் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர். இதனால் விமானப்படையின் எம் ஐ 24 தாக்குதல் ஹெலியின் கூட்டாதரவு கோரப்பட்டது.

சுமார் இரண்டு மணிநேரக் கடும் மோதலின் பின்னர் படையினர் தமது நிலை களுக்குள் பின்வாங்கிக் கொள்ள புலிகள் மீளவும் தமது முன்னரங்க நிலைகளை பலப்படுத்திக் கொண்டனர். இந்தப் படைநகர்வுக்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்டிருந்த ரி55 ரகடாங்கி ஒன்று புலிகளின் தாக்குதலில் சேதமாக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இதைப் படைத்தரப்பு நிரா கரித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் 11 படையினர் கொல்லப்பட்டு 41 படை யினர் காயமுற்றதை மட்டும் பாதுகாப்பு அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் புலிகளோ 23 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதுடன் 100 இற்கும் அதிகமானோர் காய முற்றதாக கூறியிருந்தனர். சுயாதீனத் தகவல்கள் கொல்லப்பட்ட படையினரின் தொகை 20இற்கும் அதிகம் என்றும் 105 பேர் காயமுற்றதாகவும் கூறுகின்றன. புலிகள் தரப்பல் 52 பேர் கொல்லப்பட்டதாக படைத் தரப்பு கூறுகின்றது .

ஆனால் தமது தரப்பில் போராளி ஒருவரே உயிரிழந்ததாக புலிகள் கூறியுள்ளனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட படையினரிடம் இருந்து ஆயுதங்கள், வெடி பொருட்கள், இராணுவ தளபாடங்களைக் கைப்பற்றியிருப்பதாகவும் தெரிவித்துள்ள புலிகள் இது தொடர்பான படங்களை வெளியிட்டுள்ளனர். இராணுவத் தரப்பைப் பொறுத்த வரையில் இந்தத் தாக்குதல் வெற்றியைக் கொடுக்காதது மட்டுமன்றி பெரும் இழப் புக்களையும் அவர்களுக்குக் கொடுத் திருக்கிறது.

அதேவேளை இது ஒரு மட்டுப் படுத்தப்பட்ட தாக்குதல் தான் என்று படையதிகாரிகள் சிலர் கூறுகின்றனர். அத்துடன் புலிகளின் முன்னரங்க பதுங்குகுழிகளைப் படையினர் அழித்துவிட்டுத் திரும் பியுள்ளதால் மழை பெய்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் படையதிகாரிகள் கூறு கின்றனர்.

உண்மையில் புலிகள் இந்தத் தாக்குதலில் குறைந்த இழப்புடன் படையினருக்கு அதிக சேதங்களை ஏற்ப டுத்தியுள்ளனர். புலிகள் பலவீனமாக இருப்பதாகவும் அவர்கள் குறைந்தளவு எதிர்ப்பையே காண்பிப்பார்கள் என்றும் போட்ட கணக்கு தப்பாகிவிட்டது.

புலிகளிடம் ஆளணி வளமோ ஆயுத வளமோ முகமாலை, கிளாலி முன்ன ரங்க நிலைகளில் குறைவின்றியிருப்பது படையினருக்கு தெரிய வந்திருக்கிறது. இந்தத் தாக்குத லில் படையினர் அதிக இழப்புக்களைச் சந்தித்ததை அடுத்து மறு நாள் தீபாவளி தினத் தன்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்துக்குச் சென்று குடாநாட்டுப்படைத் தளபதி மேஜர்.ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறி உள்ளிட்ட முக்கிய தளபதிகளு டன் கலந்துரையாடி பாது காப்பு நிலைமைகளை சீர்செய்ய உத்தரவிட்டுள்ளார்.

நன்றி வீரகேசரி வாரவெளியீடு

ஒரு வௌவால் வீட்டிற்கு இன்னொரு வௌவால் வந்தால், அதுவும் தொங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும்!

– இலங்கை

வலம்புரி

## ஜனாதிபதி மகிந்தவின் காய்நகர்த்தலில் ஜே.வி.பிக்கும் ஆபத்து ஏற்படலாம்

இலங்கையின் கடந்த முப்பது வருடகால அரசியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் காய்நகர்த்தல் வித்தியாசமானது.

அரசியல் கட்சிகளை உடைப்பது முதல் கொண்டு குடும்ப அரசியலை முன் நிறுத்துவதுவரை அவரின் காய்நகர்த்தல் முன்னேறியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எதிர்க் கட்சிகளின் ஒற்றுமையின்றியமையாதது எனக் கூறிய ஜனாதிபதி மகிந்த, எதிர்கட்சித் தலைவரும் ஐக்கியதேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்துகொண்டார்.

மகிந்த–ரணில் ஒப்பந்தம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாத சாதனை என சர்வதேச சமூகத்தால் பாராட்டப்பட்டது.

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகள் ஒன்றிணைவதால் இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு ஏற்படுமென உள்நாட்டு அரசியல் இராஜதந்திரிகளும் கருதினர். ஆனால் உடன்படிக்கையை மீறி ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களை ஜனாதிபதி மகிந்த தன்பால் இழுத்துக் கொண்டார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை அரசின் பக்கம் இழுப்பது நியாயமானதா? என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால், அந்த நிகழ்வு இரண்டு பிரதான கட்சிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை இல்லாமல் செய்து விட்டதென்பதே இங்கு முக்கியமான விடயமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை தன் பக்கம் இழுத்துக் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தரப்பைச் சேர்ந்த அமைச்சர்கள் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராச்சி, அநுரா பண்டாரநாயக்கா ஆகியோரின் அமைச்சுப் பதவிகளையும் பறித்துக் கொண்டார். மூவரின் பதவிப் பறிப்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், அநுராவுக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்கினார்.

இந்நிகழ்வானது தனது குடும்ப அரசியலை உள்நுழைக்கும் போது அதனை ஆளும் தரப்பைச் சேர்ந்த யாரேனும் எதிர்பார்களாயின் மங்களவுக்கு, சூரியாராச்சிக்கு நடத்திய அதேகதிதான் நடக்கும் என்பதை குறிப்பால் உணர்த்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டதாகும்.

இப்போது வரவு செலவுத்திட்டத்திற்கான ஆதரவை மையமாக வைத்து ஜே.வி.பியை உடைக்கும் படலத்தை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார். இதில் ஜே.வி.பி நின்று நிலைக்குமென கூறுவது முடியாத காரியமே. ஜே.வி.பி உடையுமேயாயின் அந்தக் கட்சியின் எதிர்காலம் இருண்ட காலத்திற்குள் மிக வேகமாக போய்ச்சேருமென்பது தவிர்க்க முடியாத நிஜமாகிவிடும்.

# சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு சட்டரீதியான உத்தரவாதம் வேண்டும்

## மக்கள் கோரிக்கை பிரகடனத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை இனங்களின் உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் சட்டரீதியான உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்று கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று வெளியிடப்பட்ட போருக்கு எதிரான தேசிய முன்னணியின் மக்கள் கோரிக்கை என்ற பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போருக்கு எதிரான தேசிய முன்னணி நாடளாவிய ரீதியில் சகல இன மக்களுடனும் மற்றும் சகலதுறைகளையும் சார்ந்த பிரதிநிதிகளுடனும் கடந்த மூன்றுமாத காலமாக நடத்திய கலந்துரையாடல்கள், விவாதங்கள், கருத்துக் கணிப்புகள் அனைத்தையும் உள்ளடக்கி மக்கள் கோரிக்கை என்ற இந்த பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணிமுதல் மாலை 6 மணிவரை இடம் பெற்ற இந்த பிரகடன வெளியீட்டு நிகழ்வில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

போருக்கு எதிரான தேசிய முன்னணியின் சார்பில் முன்னூறுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் குழுவால் இறுதி செய்யப்பட்ட இந்த பிரகடனத்தில் சிறுபான்மையினருக்கான உரிமைகள் என்று தலைப்பிட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பெரும்பான்மையினத்தவர்களால் அனைத்து பிரஜைகளுக்குமான அரசியல் தீர்மானங்களை சுதந்திரமாக எடுக்க கூடியதாகவிருக்கிறது. சிறுபான்மை மக்கள் அல்லது பின் தள்ளப்பட்ட சமூகத்தினர் மீதான பெரும்பான்மையினத்தவர்களின் இந்த செயற்பாடானது உண்மையில் ஜனநாயக ஆட்சி அல்ல என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஜனநாயக சமூகத்தில் பெரும்பான்மையினத்தவரின் சட்டமானது தனிப்பட்ட மனித உரிமைகளை உத்தரவாதப் படுத்துவதாக அமைய வேண்டும். அத்துடன் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். ஆனால் பெரும்பான்மையினத்தவரின் ஆட்சியும் அதில் காட்டப்படும் பாரபட்சமும் இன ரீதியில் சமூகத்தை பிரிக்கும் நிலையை உருவாக்குகின்றது.

எனவே ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படியும் இந்த மகஜரில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையிலும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் சட்டரீதியான உத்தரவாதத்தை வழங்கவேண்டும்.

அதேநேரம் சிறுபான்மையினத்தவரின் கலாசார வாழ்க்கையை பிரதிபலிக்கக்கூடிய வகையில் ஒரு அரசியல் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அத்துடன் சிறந்த பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்தும் வகையிலும் அரசியல் ரீதியில் தீர்மானமெடுப்பதிலும் சிறுபான்மையினரின் பங்களிப்பு இருக்கும் வகையில் தேர்தல் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த பிரகடனத்தில் இனத்துவ முரண்பாட்டு நிலைமாற்றமும் சமாதானமும் என்று தலைப்பிட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழர்களின் சட்டரீதியான அபிலாஷைகள் நிராகரிக்கப்பட்டதாலேயே இனத்துவ பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளது. அத்துடன் கடத்தல்கள் மற்றும் சித்திரவதைகள், காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்து மனித உரிமைமீறல் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன. இது ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்ந்துள்ளது.

எனவே இயன்றளவு விரைவில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு எதிர்க்கட்சியுடன் அரசாங்கம் உண்மையான கருத்தொருமிப்பை ஏற்படுத்தவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட ஜனநாயகமும் ஆட்சியும் அரச கரும மொழிகள், மனித உரிமைகளை பாதுகாத்தலும் ஊக்குவித்தலும், சமூக அபிவிருத்தி பொருளாதாரம் உட்பட மேலும் பல விடயங்கள் குறித்த பரிந்துரைகளும் இந்த பிரகடனத்தில் செய்யப்பட்டுள்ளன.

இந்த பிரகட வெளியீட்டு நிகழ்வில் போருக்கு எதிரான தேசிய முன்னணியின் தலைவர் குமார் ரூபசிங்க, மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார உட்பட கலந்துகொண்டனர். (ந-5)

## நல்லூர்க் கந்தன் பாமாலை இசையொலி இறுவெட்டு

(யாழ்ப்பாணம்)

வேலணை சி.இராசரத்தினம் (இறைமணி) அமரத்துவமடைந்து ஓராண்டு நினைவு அஞ்சலி நிகழ்வையொட்டி அவர் இயற்றிய நல்லூர்க் கந்தன் பாமாலை எனும் கவிதைகள் இசையொலி இறுவெட்டாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெறும். இவ் இசையொலி இறுவெட்டு அற்புதனின் இசைமைப்பில் கலாநிதி என்.வி.எம். நவரத்தினம், பேராசிரியர் சண்முகலிங்கம், ந.பர்ந்தாமன், ந.தனசொரூபி ஆகியோரின் குரலால் ஒலிப்பதிவாகியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## வ.செ.திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க அரசு தரப்பில் 13 பேர் தயார்?

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் போது அதற்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக ஆளும் தரப்பினரும் எதிராக வாக்களிப்பதற்காக எதிர்க்கட்சிகளும் ஆதரவை திரட்டுவதற்காக துரித முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

2008ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத்திட்டத்தின் முதலாவது வாக்கெடுப்பு எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளு மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வாக்கெடுப்பின் போது எதிராக வாக்களிக்க ஆளும் கட்சியில் சில அமைச்சர்களும் ஆதரவாக வாக்களிக்க எதிர்க் கட்சிகளில் சிலரும் தயாராக இருந்து வருவதாக தெரிவிக்கப்படுவதையடுத்தே இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வரவு– செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க தற்போது ஆளும் தரப்பு அமைச்சர்கள் 13 பேர் தயாராக இருப்பதாகவும் வேறு சில உறுப்பினர்களும் தயாராக இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இதேவேளை ஆளும் தரப்பிலும் வரவு–செலவுத் திட்டத்திற்கு ஆதரவை பெற்றுக்கொள்ளும் பொருட்டு எதிர்த் தரப்பு உறுப்பினர்களது ஆதரவை நாடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் மக்கள் விடுதலை முன்னணி எந்தவொரு முடிவையும் இன்று வரை தெரிவிக்காது இருந்து வருகிறது. (அ–5)

## சமகால விலையில் பெற்றோலை விற்பதால் அரசுக்கு மாதம் ரூ.2 பில்லியன் நட்டம்

உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றபோதும் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை உள்நாட்டில் அவைகளின் விலைகள் அதிகரிக்கப்பட மாட்டாது என எரிபொருள் துறை அமைச்சர் ஏ. எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார். அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தற்போது விற்பனையாகும் விலையிலேயே பெற்றோலை தொடர்ந்தும் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளது.

சமகால விலையில் பெற்றோலை விற்பனை செய்வதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மாதமொன்றுக்கு இரண்டு பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

மக்களின் நன்மைகருதி இவ் வாறு பொருட்களை குறைந்த விலையிலும், மானிய அடிப் படையிலும், அரசாங்கம் வழங்கிவருவதால் பல பில்லியன் ரூபா அரசுக்கு நட்டமேற் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கில் போக்குவரத்தை கட்டுப்படுத்துமாறு தமது பணியாளர்களுக்கு ஐ.நா. அறிவுறுத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஆயுதக்குழுக்களிடையே ஏற்பட்டுள்ள முறுகலைத்தொடர்ந்து அங்குள்ள தமது பணியாளர்களின் நடமாட்டங்களுக்கு ஐ.நா. கடும் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது.

அத்துடன் ஐ.நா. உயரதிகாரிகளையும் மட்டக்களப்பிற்கு செல்ல வேண்டாமென ஐ.நா.அறிவுறுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மட்டக்களப்பில் ஆயுதக்குழுக்களின் அலுவலகங்கள் மற்றும் நடமாட்டங்கள் உள்ள இடங்களூடான போக்குவரத்தை தவிர்க்குமாறும் அப் பகுதிகளுக்கு பணிகளின் நிமித்தமாகவேனும் செல்ல வேண்டாமெனவும் ஐ.நா. தனது பணியாளர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறது.

அதேபோல் திருகோணமலையில் பாதுகாப்பற்ற பகுதிகளுக்கு விஜயம் செய்வதை தவிர்க்குமாறு ஐ.நா.பணியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ–5)

## அரச ஊழியர்களின் விடுமுறை போனஸ் முறை இரத்து

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பாவிக்காத விடுமுறைக்கான மேலதிக கொடுப்பனவுகள் பொருளாதார நெருக்கடிகாரணமாக முன்னறிவித்தல் எதுவுமின்றி ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஆங்கில தினசரியொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு இக் கொடுப்பனவுக்காக ரூபா 6.5 பில்லியன் வழங்கப்பட்டதாகவும் 2007ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டதெனவும் இதனால் அரச ஊழியர்கள் தங்களது விடுமுறைகளைப் பாவிக்க முனையலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி. திசா நாயக்க இது பற்றித் தெரிவிக்கையில் புதிய சுற்றறிக்கையின்படி அரச ஊழியர்கள் சுகவீன மற்றும் அமைய விடுமுறைகளையும் அடுத்த வருடத்துக்குக் கொண்டு செல்ல முடியும் எனத் தெரிவித்துள்ளார். (அ–5)

# வேலூர் அஞ்சலிக் கூட்டத்துக்கு எதிர்ப்பு காங்கிரஸ் கட்சியினரின் கொடும்பாவி எரிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக் குழுத்தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு தமிழகத்தின் வேலூரில் நடத்தப்பட இருந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினரின் கொடும்பாவியை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் கொளுத்தினர்.

வேலூர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நேற்று மாலை வீரவணக்கக் கூட்டம் நடத்தப்பட இருந்தது. அக்கூட்டத்துக்கு எம்.ஜி.ஆரின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த ஜி.விசுவநாதன் தலைமை வகிப்பதாகவும் அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இக் கூட்டத்துக்கான அனுமதியை இரத்து செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக உள்ள ஞானசேகரன் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். இதனையடுத்து கூட்டத்துக்கான அனுமதியை இரத்து செய்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் ஊரிஸ் கல்லூரியில் உள்ள அரங்கத்தில் அஞ்சலிக் கூட்டத்தை நடத்த வேலூர் தமிழ்ச்சங்கத்தினர் ஏற்பாடு செய்தனர். ஆனால் அக்கல்லூரி நிர்வாகத்திடமும் ஞானசேகரன் சென்று கூட்டத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று அச்சுறுத்தியுள்ளார்.

இதனால் அந்தக் கல்லூரி நிர்வாகமும் இடம் தர மறுத்தது. இந்த இனத்துரோகத்தை கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் வேலூரில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரனின் கொடும்பாவியை எரித்தனர். ஞானசேகரனின் கொடும்பாவியை எரிக்க முயன்றதாக 28 விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினரை பொலிஸார் கைது செய்தனர். (ச-5)

# தமிழக முதல்வர் கருணாநிதியின் இரங்கல் எம்மை ஆறுதலடையச் செய்துள்ளது

## பா.நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவையொட்டி தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஆறரைக் கோடி தமிழ் மக்களின் உணர்வுகளை இரங்கல் செய்தி மூலம் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி வெளியிட்டுள்ளமையானது ஆறாத்துயரில் ஆழ்ந்திருந்த எம் எல்லோரையும் ஓரளவேனும் ஆறுதலடையச் செய்துள்ளது என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் நக்கீரன் வாரமிருமுறை இதழுக்கு அளித்துள்ள சிறப்பு நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழீழத் தேசத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் அளவிலா அன்பும் பாசமும் கொண்டவர். நாம் விடுதலை பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதை விரும்புபவர். தமிழின உணர்வு மிக்கவர். கவிதை வடிவில் அவர் தெரிவித்த இரங்கல் செய்தி ஆறாத் துயரில் ஆழந்திருந்த எம் எல்லோரையும் ஓரளவேனும் ஆறுதலடையச் செய்துள்ளது. அதற்காக நாம் அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் மறைவையொட்டி தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஆறரைக்கோடி தமிழ் மக்களின் உணர்வுகளையே தனது இரங்கல் செய்தி மூலம் பிரதிபலித்துள்ளார்.

தமிழக மக்கள் எமது உடன் பிறப்புக்கள். அவர்கள் எப்போதும் எம்முடன் இருப்பவர்கள். எமக்கு ஒன்று என்றால் அவர்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றாக கொதித்தெழுவார்கள். அவர்கள் தொடர்ந்தும் எமது போராட்டத்திற்காக நாம் விடுதலையடையும் வரை எமக்காக குரல் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

தமிழக அரசும் மத்திய அரசும் எமது போராட்டத்தை அங்கீகரித்து எமது மக்களின் விடுதலையை வேகமாக வென்றெடுப்பதற்கு சகல அங்கீகாரங்களையும் எமக்குத் தர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என பா.நடேசன் தெரிவித்துள்ளார். (ச-5)

# புலிகளின் தலைவரை இலக்கு வைப்போம்

## வான்படைத் தளபதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவரை இலக்கு வைப்போம் எனவும் அது தமக்கு கடினமான காரியம் அல்ல எனவும் விமானப் படைத் தளபதி றொசான் குணதிலக கூளுரைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவரது நடமாட்டம் வன்னியில் மட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாத்திரமே காணப்படுவதாகவும் தமது இராணுவம் பொதுமக்களிடம் இருந்து இது தொடர்பில் தகவல்கள் பெறுவதற்கு கோரியுள்ளதாகவும் பொதுமக்கள் தகவல்களை வழங்கும் பட்சத்தில் தாம் இலக்கு மீது தாக்குதல்களை நிகழ்த்தவுள்ளதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். (ச-5)

# தேடுதல் நடவடிக்கையில் 75 பேர் கைதாகினர்

(கொழும்பு)

கம்பஹா பேலியகொடை மற்றும் வெல்லம்பிட்டி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பெரும் தேடுதலில் தமிழர்கள் உள்ளிட்ட 75 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை தொடர்ந்து இவ் விசேட தேடுதல் நடவடிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினரும் பொலிஸாரும் கூட்டாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கம்பஹா மற்றும் பேலியகொடை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் தமிழர்கள் உள்ளிட்ட 61 பேரும் வெல்லம்பிட்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 14 தமிழர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய பகுதியில் கைது செய்யப்பட்ட 14 தமிழர்களிடமும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். எனினும் விசாரணைகளின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் கூறினர். (ச)

# வாழைச்சேனையில் கைக்குண்டு வீச்சு

## பெண் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் ஆயுதக் குழுவினரின் கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மாவடிச்சேனை கணக்கியார் வீதியில் உள்ள ஒரு வீட்டின் மீது நேற்று அதிகாலை 4.30 மணிக்குக் கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதில் முஸ்தாபா ரசீமியா (வயது-26) என்ற பெண் கொல்லப்பட்டார், அவரது மகன் மொகமெட் அமர் (வயது-02) காயமடைந்துள்ளார் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (எ-5)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு...

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் ஞாபகார்த்த உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

கடந்த காலத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்காக இந்தியா மத்தியஸ்தம் வகித்த போது விடுதலைப் புலிகள் தனித் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு ஒருமித்த இலங்கைக்குள் தீர்வினைக்கான முன்வரவேண்டும் என்றும்,

இலங்கை அரசு அர்த்தமுள்ள சகலராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றினை முன்வைக்கவேண்டும் என்றும் இந்தியா கோரியிருந்தது. அந்நிலைப்பாட்டில் தற்போது மாற்றம் எதுவுமில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வானது இராணுவ வழிகளிலல்லாது சமாதானப் பேச்சுவார்த்தை ஊடான அரசியல் தீர்வாகவே அமைய வேண்டும்.

இந்தியா இங்கு வலியுறுத்த விரும்புவது என்னவென்றால் இனப்பாரபட்ச உணர்வினாலும் கலாசார, மொழி மற்றும் மனித உரிமைகள் வேறுபட்ட உணர்வினாலும் எழுந்த இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை ஊடான அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும்.

இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஸ்திரமான அரசியல் பரவலாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இலங்கையின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு நிலையான சமாதானம், பாதுகாப்பு மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்பன அவசியம். இலங்கையின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை இந்தியா ஒரு ஆட்சி நிபுணத்துவம் உடைய இராஜதந்திரி எனக் கருதியது.

இலங்கையின் இறைமையை பாதுகாக்கும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கும் இந்தியா எப்போதும் அர்ப்பணிப்புடனேயே இருக்கின்றது.

அண்மைக்காலமாக இலங்கையில் மீண்டும் இடம்பெற்றுவரும் வன்முறைகள் குறித்து மறைமுகமாக கண்டித்துப் பேசிய ப.சிதம்பரம், அர்த்தமில்லாத விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் ஒருபுறம், அதனை முறியடிக்க ஆயுதப் படைகளின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகள் மறுபுறம் நாட்டில் மேலும் மேலும் இறப்புக்களையும் அழிவுகளையுமே ஏற்படுத்தும்.

வன்முறைகள் ஊடாக எந்தத்தரப்புமே வெற்றி காண முடியாது சமாதானம் என்பது கரிசனையுடன் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அத்துடன் சமாதான உடன்படிக்கை மக்களின் நம்பிக்கைகளை பெற்றிருக்க வேண்டும் என அரசியல்வாதிகள், அமைச்சர்கள், பாதுகாப்புப் படைத்தளபதிகள் மற்றும் இராஜதந்திரிகள் மத்தியில் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் சமாதானம் பற்றி இந்தியா காலத்திற்கு காலம் அறிக்கைகளை வெளியிட்டு வந்தாலும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னர் அது இலங்கை தொடர்பான கொள்கையில் ஒரு இறுக்கமான போக்கை கடைப்பிடித்து வருகிறதே என பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த நிதியமைச்சர், இந்தியா முன்னர் இலங்கை இனப் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகித்து வந்த போதிலும் பின்னர் ஏனைய உதவிகளைச் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தூரம் பின்தள்ளி நிற்பதாகவும் கூறினார்.

ஆனாலும் காலத்திற்கு காலம் இது தொடர்பில் ஆலோசனைகளை தகுந்த முறையில் வழங்கி வருவதாகவும் கூறினார்.

இந்தியா, இலங்கை இனப்பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்கவில்லை என்பதனால் இந்தியா இந்தப் பிராந்தியத்திலுள்ள பிரச்சினைகளை புறக்கணித்துவிட்டது; பாராமுகமாக இருக்கின்றது என்று அர்த்தப்படுத்திவிட முடியாது.

இந்தியா இலங்கையிலுள்ள பிரச்சினை குறித்து மிகவும் கரிசனையாக இருக்கிறது. அத்துடன் இலங்கை அரசையும் தமிழ்ச் சமூகத்தின் தலைவர்களையும் சமாதானப் பேச்சுக்களின் ஊடாக அரசியல் தீர்வைக் காணுமாறு வேண்டி வருகிறது என்றார். (ச-5)

# ...மசல்...

மின்சாரம் தடைப்பட்ட காரணத்தினால் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. எனினும் நேற்று நண்பகல்முதல் அவை வழமை போன்று செயற்படத் தொடங்கின. (ச)

# ...யாலவுக்கு...

சுசந்த ரணசிங்க, விசேட பொலிஸ் அதிரடிப் படைப்பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்.மகிந்தபால சூரிய, சிவில் பாதுகாப்பு படைத்தளபதி ரியல் அட் மிரல் சரத் வீரசேகர மற்றும் தெற்குப் பகுதிக் குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜயந்த கமகே ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (ச)

# அரிசியின்...

சம்பா அரிசி 55 ரூபா முதல் 65 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அத்துடன் பொன்னி, சிவப்பு, நாடு போன்ற அரிசி வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதேவேளை கொழும்புக்கு வெளியே நாட்டின் பல்வேறு இடங்களிலும் அரிசியின் விலை கணிசமாக உயர்வடைந்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ச)

# ஐ.தே.க...

ரைத்ததுடன் மட்டுமல்லாது வடக்கு கிழக்கில் போராடும் இராணுவத்தினரை அவர் அவமதித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தமது தலைமைத்துவத்தில் அதிருப்தியடைந்துள்ளதாகவும் தேசியப் பிரச்சினையில் தமது தலைமை உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார் என அமைச்சர் கூறினார். (எ-5)

# இலங்கைக்கான உதவிகளை...

இலங்கைக்கான உதவிகளை அவை உறை நிலையில் வைப்பதற்கு தீர் மானித்துள்ளன. இந்தக் காரணங்களால் உதவி வழங்கும் நாடுகள் அபிவிருத்திப் பணிக்காக மேலதிக நிதியை எமக்கு வழங்கப் போவதில்லை.

எனினும் 2008 ஆம் ஆண்டுக்கு என முன்னரே ஒதுக்கப்பட்ட தொகையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை என அவை மேலும் தெரிவித்துள்ளன.

தற்போதைய போர் நிலைமை தொடர்ந்தால் மேலும் சில உதவி வழங்கும் நாடுகளும் இலங்கைக்கான உதவி வழங்குவதை நிறுத்தலாம் எனவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-5)

# சுட்டநாதர்...

தெருவைச் சேர்ந்த திருச்செல்வம் ஜெயக்குமார் (சுதாகரன் -வயது 31) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது தலையிலும் மார்பிலும் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ். பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)

# வரணிப்...

பெற்றதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் இளைஞனின் சடலம் அடையாளம் காணும் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-5)

# பாண் மற்றும் மாவின்...

விற்பனை செய்யுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறியத்தந்துள்ளார்.

ஒரு கிலோ கோதுமை மாவின் விற்பனை விலை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 73 ரூபாவில் இருந்து ரூபா68.50 ஆக குறைக்கப்பட்டுள்ளது. பேக்கரி சங்கங்கள் எதிர்வரும் 14ஆம் திகதிவரை பாணின் தற்போதைய விலையினை தொடர்ந்து நடைமுறைப்படுத்துமாறும் 15 ஆம் திகதி முதல் புதிய விலையினை நடைமுறைப்படுத்துமாறும் அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார். புதிய விலை விபரம் வருமாறு;பாண் (450கிராம் ) 43 ரூபா, கி.பணிஸ் (150கிராம்) 23ரூபா, ரீ.பணிஸ் (130கிராம்) 21 ரூபா, சங்கிலி பணிஸ் (130கிராம்) 21 ரூபா, கொம்பு பணிஸ் (70கிராம்) 13 ரூபா, அடைக் கேக் 17 ரூபா. (ச)

# முகமாலைப்...

பெரியதம்பனை பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் 6 சடலங்கள் நேற்று மாலை வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த மோதல்கள் மற்றும் சேத விபரங்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து உடனடியாகத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.